நாவாந்துறைப் படிப்பகம்

பக்கங்கள் எட்டு
விலை ரூபா 5-00

Registered as a News Paper in Sri Lanka

# வலம்புரி
VALAMPURI

அதி நவீன மோஸ்தர்களில்
தரம் குன்றா
தங்க நகைகளுக்கு
அர்ச்சனா
ஜுவலர்ஸ்
118, கஸ்தூரியார் வீதி,
176/1, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

சங்கு 02 வள்ளுவர் ஆண்டு 2032 புரட்டாதி 18 வியாழக்கிழமை (04-10-2001) தொலைபேசி 3378 ஒலி 297

## ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ்

# ரவூப்ஹக்கீம் அணியைச் சேர்ந்த ஒருவரே புதிய நியமன எம்.பி?

### ஆதரவைப் பெற ஜனாதிபதி அதிரடி நடவடிக்கை

(நமது நிருபர்)

அரசாங்கத்திற்கு எதிராக ஐக்கிய தேசியக் கட்சியினால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள நம்பிக்கையில்லாப் பிரேரணையை எதிர்வரும் 9ம்திகதி செவ்வாய்க்கிழமை விவாதத்திற்கு எடுத்துக் கொள்ள வேண்டுமென்று எதிர்க்கட்சிகள் வலியுறுத்தியுள்ள நேரத்தில் மரணமான பொதுஜன ஐக்கிய முன்னணி தேசிய பட்டியல் எம்.பி அஹமட் ரிஸ்வி சின்னலெப்பையின் இடத்திற்கு சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ரவூப்ஹக்கீமின் அணியைச் சேர்ந்த ஒருவரை நியமித்து நம்பிக்கை இல்லாப் பிரேரணை வாக்கெடுப்பில் தனது பெரும்பான்மைப் பலத்தை நிரூபிக்கும் யுக்தியை ஜனாதிபதி கையாள விருப்பதாக அரசியல் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

சிறிலங்கா முஸ்லிம்காங்கிரஸ் முன்னாள் அமைச்சர் ரவூப்ஹக்கீமின் அணியைச் சேர்ந்த எம், பி அஹமட் ரிஸ்வி சின்னலெப்பையின் இடத்துக்கு தமது அணியைச் சேர்ந்தஒருவரையே நியமிக்க வேண்டுமென்று ரவூப் ஹக்கீம் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவிடம் வேண்டு கோள்விடுத்திருந்தார்.

இந்நிலையில் நம்பிக்கை இல்லாப்பிரேரணையில் இருந்து அரசு தன்னைக் காப்பாற்றிக்கொள்வதற்கு ஒரு சந்தர்ப்பமாக இந்த எம்.பியின் நியமனம் அமைய விருப்பதாக ரவூப் ஹக்கிமின் அணியைச் சேர்ந்த ஒருவருக்கு எம்.பிப்பதவியை வழங்க ஜனாதிபதி முன்வந்துள்ளார்.

காலமான அஹமட் ரிஸ்வி சின்னலெப்பை பொதுஜன ஐக்கிய முன்னணியின் தேசியப்பட்டியல் எம், பியாகவே நியமனம் பெற்றவர் இவரது

(08ஆம் பக்கம் பார்க்க

## ★ இன்று அதிகாலை திகில் சம்பவம்

# 54 பயணிகளுடன் விமானம் கடத்தப்பட்டது!

(புதுடில்லி)

இந்தியாவின் மும்பாய் விமான நிலையத்தில் இருந்து டில்லி நோக்கி 54 பயணிகளுடன் புறப்பட்ட விமானம் ஒன்று இன்று அதிகாலை 1.30 மணிக்கு இனந்தெரியாதோரால் கடத்திச் செல்லப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

(8ம் பக்கம் பார்க்க)

## அரசியல் நிர்ணய சபை

# பிரதிநிதியைத் தெரிவு செய்வதில் தமிழ்கட்சிகள் தொடர்ந்தும் இழுபறி!

[நமது நிருபர்]

அரசியல் நிர்ணய சபைக்குரிய உறுப்பினர்களை நியமனம் செய்வதில் தமிழ்க் கட்சிகளுக்கிடையே ஒத்த கருத்து நிலவாமையால் உறுப்பினர்களைத் தெரிவு செய்வதில் தொடர்ந்தும் இழுபறிநிலை காணப்படுகிறது.

நாளை வெள்ளிக்கிழமைக்குள் தமிழ் எம். பிக்கள்

(08ம் பக்கம் பார்க்க)

# யாழ். போதனா வைத்தியசாலையின் புதைகுழி மீண்டும் தோண்டப்பட்டது

### மேலும் எலும்புக்கூடுகள் கிடைக்கவில்லை

(யாழ்ப்பாணம்)

டும் நேற்று ஆரம்பிக்கப்பட்

திகமாக எலும்புக் கூடுகள்

## மின்சாரம் தாக்கி

# இளைஞர் இருவர் பலி

### நெல்லியடியில் பரிதாப சம்பவம்

# புதைகுழி மீண்டும் தோண்டப்பட்டது

## மேலும் எலும்புக்கூடுகள் கிடைக்கவில்லை

(யாழ்ப்பாணம்)

யாழ் போதனா வைத்திய சாலையில் கண்டுபிடிக்கப் பட்ட மனிதப் புதைகுழிக ளைத் தோண்டும் பணி மீண் டும் நேற்று ஆரம்பிக்கப்பட் டது.

நேற்றைய தினம் அப் பகுதி யில்தோண்டப்பட்ட மனிதப் புதை குழியில் இருந்து, மேல திகமாக எலும்புக் கூடுகள் எவையும் மீட்கப்படவில்லை.

கடந்த மாதம் 10ந் திகதி தோண்டப்பட்ட போது மீட் டெடுக்கப்பட்ட இரு எலும் புக் கூடுகளின் மேலதிகமான எச்சங்களும், சில எலும்புக

(08ம் பக்கம் பார்க்க)

# இளைஞர் இருவர் பலி

## நெல்லியடியில் பரிதாப சம்பவம்

[மீசாலை]

நெல்லியடியில் உள்ள ஜீவா பல்பொருள் வர்த்தக நிலை யம் ஒன்றில் ஏற்பட்ட மின் ஒழுக்கு காரணமாக இருவர் ஸ்தலத்திலேயே பலியானார் கள். இவர்களைக் காப்பாற றச்சென்ற ஒருவர் காயம டைந்த நிலையில் ஆஸ்பத்திரி யில் அனுமதிக்கப்பட்டுள் ளார்.

அல்லாரையில் இருந்து இடம்பெயர்ந்து உடுப்பிட்டி

(08ஆம் பக்கம் பார்க்க)

# வவுனியா இளைஞன் கழுத்து வெட்டிக் கொலை

(வவுனியா)

வவுனியா பண்டாரிக்குளம் குளக்கட்டுக்கு அருகாமையில் இனந்தெரியாதவர்களினால் கழுத்து வெட்டப்பட்டு கொலைசெய்யப்பட்ட இளை ஞன் தேக்கம் காட்டைச் சேர்ந்த இராமசாமி சதீஸ் குமார்(வயது-18)என அடை யாளம் காணப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் தொடர்பாக வவுனியா மாவட்ட நீதிவான் எம்.இளஞ்செழியன் நேற்றுப் பகல் ஸ்தலத்திற்குச் சென்று விசாரணைகளை மேற் கொண்டிருந்தார்.

செவ்வாய்க்கிழமை இசைக் கருவிகளை வாங்குவதற்காக அநுராதபுரம் சென்ற இவர்

(08ம் பக்கம் பார்க்க)

# குமரப்பா, புலேந்திரன் நினைவு தினம் நாளை

(வவுனியா)

பலாலி இராணுவத்தளத் தில் சயனைட் அருந்தி தற் கொலை செய்துகொண்ட லெப். கேணல் குமரப்பா, லெப். கேணல் புலேந்திரன் உட்பட 12 வீரவேங்கைகளு டைய 14ம் ஆண்டு நினைவு தினம் நாளை வெள்ளிக் கிழமை இராணுவக்கட்டுப் பாடற்ற வன்னிப் பிரதேசத் தில் அனுஷ்டிக்கப்படவுள் ளது.

1987ம் ஆண்டு இலங்கைக் கடற்பரப்பில் கடற்படையின ரால் கைது செய்யப்பட்டு பலாலி இராணுவத்தளத்தில் தடுத்து வைக்கப்பட்டு மேல திக விசாரணைக்காக

[08ம் பக்கம் பார்க்க]

# மட்டக்களப்பு மாவட்டத்தில் ஊர்காவல்படை அமைக்கும்

## செய்தியை மறுக்கிறார் ஹிஸ்புல்லா

(மட்டக்களப்பு)

மட்டக்களப்புமாவட்டத்தில் முஸ்லிம்மக்களின் பாதுகாப் பிற்கு 500முஸ்லீம் இளைஞர் களைக் கொண்ட ஊர்காவல் படைஒன்றை அமைக்க நட வடிக்கை எடுத்துவருவதாக வெளியானசெய்தியைமுன்னா ள்பிரதிஅமைச்சர் எம்.எல். ஏ.எம் ஹிஸ்புல்லா மறுத் துள்ளார்.

இதுதொடர்பாக ஹிஸ்புல் லா மேலும் தகவல்தருகை யில் ஊர்காவல்232வதுபடை அணியின் அதிகாரியுடன் தான் கதைத்தபோதிலும் ஊர்காவல்படைக்கு ஆட்கள் திரட்டுவது தொடர்பாக எத்தகைய பேச்சுவார்த்தை யிலும் ஈடுபடவில்லை.

விடுதலைப் புலிகளுக்கும் எனக்கும் இடையிலான தொடர்பு பரஸ்பரபுரிந்து ணர்வு அடிப்படையிலானது என்றும் இச்செய்திமூலம் தவ றானகருத்தை உருவாக்க முயற்சிப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (வ)

# வெளிநாட்டு செய்தியாளர் மட்டு. சென்று திரும்பினார்

(மட்டக்களப்பு)

நீண்டகாலத்திற்குப் பின் வெளிநாட்டுபத்திரிகையாளர் ஒருவர் மட்டக்களப்பில் புலி களின் கட்டுப்பாட்டுப் பிரதே சத்திற்குச்சென்று கடந்த சனிக்கிழமை திரும்பியுள் ளார்.

அவுஸ்திரேலியாவின் பிர பல பத்திரிகையாளரான றிம் எலீயற் என்பவரே புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத் திற்குச் சென்றுதிரும்பியுள்

[0,8ம் பக்கம் பார்க்க]

# பாடசாலை - பல்கலைக்கழக மாணவிகள்

# கற்பமுறுவதால்கருச்சிதைவுகளும்,அதிகரிக்கிறது!

## மகப்பேற்று நிபுணர் திருமதி ஜி. பவானி தெரிவித்த அதிர்ச்சியூட்டும் தகவல்

(யாழ்ப்பாணம்)

'இனிவருங் காலங்களில் யாழ் குடாநாட்டில் கருச்சிதைவினால் ஏற்படப் போகும் மரணங்களின் எண்ணிக்கை அதிகரிக்கும் துர்ப்பாக்கிய நிலை ஏற்படப் போகிறது. வேண்டாத கர்ப்பங்களோடு பாடசாலை மாணவிகளும் பல்கலைக்கழக மாணவிகளும் வைத்தியசாலைகளை நோக்கிப் படையெடுப்பது இந்த நிலைமைக்கு காரணமாகலாம். கருச்சிதைவு எமது நாட்டில் சட்டத்திற்கு எதிரானது. கர்ப்பம் எவ்வாறு ஏற்படுகின்றது என்பது பற்றி எமது இளம் சந்ததிக்கு அதிகம் தெரியாது.

எனவே பாடசாலை மாணவர்களுக்கு பாலியல்தொடர்பான அறிவைப் புகுத்துதல் அவசியமாகின்றது. மேலும் குடும்பக் கட்டுப்பாடு பற்றிய அறிவு இன்மையாலும் தேவையில்லாத பல கர்ப்பங்கள் ஏற்படுகின்றது. இதைத் தடுத்து நிறுத்துவதற்கு பெண்களின் கல்விக்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டும்'.

யாழ் போதனா வைத்தியசாலை பெண் நோயியல் வைத்திய நிபுணர் திருமதி ஜி. பவானி யாழ் விஞ்ஞான சங்க 'சி' பிரிவினால் ஒழுங்கு செய்யப்பட்ட கருத்தரங்கில் 'பிரசவ கால தாயின் இறப்பு' என்ற தலைப்பில் உரையாற்றும்போது இவ்வாறு கூறினார்.

யாழ் பல்கலைக்கழக நூலக கேட்போர் கூடத்தில் நேற்று புதன்கிழமை நடைபெற்ற கருத்தரங்கில் அவர் மேலும் உரையாற்றுகையில்

மகப்பேற்றின் போது நாம் இரண்டு உயிர்களுக்காகப் போராட வேண்டிய நிலையில் இருக்கின்றோம். யாழ் போதனா வைத்தியசாலையில் வைத்திய நிபுணர் பற்றாக்குறையினால் மிக நெருக்கடியான நிலை ஏற்பட்டுள்ளது.

வைத்தியர்களான நாம் மரணங்களைக் குறைக்கலாமே தவிர அவற்றை தடுத்து நிறுத்த முடியாது.

இங்கு நிலவும் மருந்துப் பற்றாக்குறை மருத்துவ நிபுணர் பற்றாக்குறைகளை நிவர்த்தி செய்ய மக்களின் ஒருமித்த குரல் தான் ஒலிக்க வேண்டும். வைத்தியசாலையின் முன்னேற்றத்தில் பொது மக்களுக்கும்பங்குஉண்டு. மக்கள் விழிப்படையாத சந்தர்ப்பத்தில் நிர்வாகத்தினால் எதையும் சாதித்துவிட முடியாது.

பிரசவத்தின்போது இரத்தப் பெருக்கினால் மரணம் ஏற்படுகிறது. கருச்சிதைவினால் மரணம் ஏற்படுகிறது. மற்றும் பிள்ளைப் பேற்றுக்கான சத்திர சிகிச்சையின் போதும் மரணம் ஏற்படுகிறது.

எமது சமூகத்தில் இரத்த தானம் கொடுப்பது அரிதாகவே காணப்படுகிறது. பல்வேறு விதமான தப்பவிப்பிராயங்கள் நிலவுகின்றமையே இதற்கான காரணமாகும். ஆண்கள் மூன்று மாதங்களுக்கு ஒருதடவைஒரு பைந்து இரத்தம் வழங்கலாம் பெண்கள் மூன்று மாதங்களுக்கு ஒரு தடவை அரைப்பைந்து இரத்தம் வழங்கலாம்.

சமூகத்தில் பெண்களின் அந்தஸ்தை உயர்த்துதல்,இனவிருத்தி சம்பந்தமான அறிவை வளர்த்தல், குடும்பக்கட்டுப்பாட்டை பின்பற்றல் போன்றவற்றின் மூலம்தேவையற்ற கர்ப்பங்களைத் தடுத்து நிறுத்த முடியும்என்றும் மகப்பேற்று வைத்தியநிபுணர் திருமதி ஜி. பவானி தெரிவித்தார். (ந-106)

## வீதி இருளில்

(யாழ்ப்பாணம்)

புன்னாலைக்கட்டுவன் ஆயாக்கடவை பிள்ளையார் கோவிலிற்கு அருகில் வீதி ஓரமாக பொருத்தப்பட்டிருந்ததாகமின் விளக்கு பழுதடைந்து உள்ளதாகவு இதனால்அப்பகுதி இருளில் மூழ்கி இருப்பதாகவும் தெரிவிக்கப் படுகிறது. (உ-2)

## ஊழியர்கள் பாதிப்பு

(உடுவில்)

சுன்னாகம் நகர வர்த்தக நிலையங்கள் சனிக்கிழமை மற்றும் போயா தினங்களில் இயங்குவதால், தமது நலன்கள் பாதிக்கப்படுவதாகவும் இவ் வர்த்தக நிலையங்களில் கடமையாற்றும் ஊழியர்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.

மேலதிக நேர வேலைக்கு தமக்கு விசேட கொடுப்பனவுகள் வழங்கப்படுவதில்லை எனவும் தெரிவித்துள்ளனர். (உ-129)

## அதிபர்கள் கூட்டம்

(உடுவில்)

உடுவில், தெல்லிப்பழை கல்விக் கோட்ட அதிபர்களுக்கான கூட்டம் இன்று பி. ப. 2.00 மணிக்கு இராமநாதன் கல்லூரியில் நடைபெற விருப்பதாகவும், இதில்பல முக்கிய விடயங்கள் கலந்துரையாடவிருப்பதால் தவறாது அதிபர்களை கலந்து கொள்ளும்படியும் வலிகாமம் உதவிக் கல்விப் பணிப்பாளர் திருமதி. றெஜீனா இருதய நாதன் அறிவித்துள்ளார். (உ-129)

## பாடமேம்பாட்டு கண்காட்சி

(நவக்கிரி)

யா/ அச்சுவேலி மத்திய கல்லூரியின் பாடமேம்பாட்டுக் கண்காட்சியும் நீர்த்தாங்கி திறப்புவிழாவும் இன்று மு. ப. 10 00 மணிக்கு கல்லூரி அதிபர் திருமதி ச. கனகராசா தலைமையில் நடைபெறவுள்ளது.

நிகழ்வில் சிறப்பு விருந்தினர்களாக கோப்பாய்க் கோட்ட உதவிக் கல்விப் பணிப்பாளர் இ. சிவஞானசுந்தரம், வலிகிழக்கு பிரதேச சபை உப தலைவர் யு எல்.ஏ ரவிஆகியோர்கலந்துகொள்ளவுள்ளனர். (உ-233)

## மருந்தகத்தில் மருந்து தட்டுப்பாடு

(வரணி)

வரணிமத்தியமருந்தகத்தில் மருந்து வகைகளுக்கும் பண்டேஜ் துணிக்கும் தட்டுப்பாடு நிலவுவதாகத் தெரிவிக்கப் படுகிறது.

தென்மராட்சியில் சிறப்புற நடந்து வரும் இம்மருந்தகத்தில் மேற்படி தட்டுப்பாடுகளால் நோயாளர்கள் பாதிக்கப்படுவதாக சுட்டிக்காட்டப் டப்படுகிறது. (எ-211)

## ஆலயம் புனரமைப்பு

(கொழும்புத்துறை)

யாழ்ப்பாணம் பாசையூர் புனித அந்தோனியார் ஆலய புனரமைப்பு வேலைகள் துரித கதியில் நடைபெற்று வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

150ஆண்டுகள்பழமைவாய்ந்தஇவ்வாலயப்புனரமைப்புப் பணிகளுக்கென மாண்புமிகு அமைச்சர் பல லட்சம் ரூபாய்களை அண்மையில் வழங்கியிருந்தார் என்பதும்குறிப்பிடத்தக்கது. (எ223)

## அன்பு வாரம்

(யாழ்ப்பாணம்)

இம்மாதம் 15 ஆம் திகதி முதல் 21 ஆம் திகதி வரையான 7தினங்களை காருண்ய உணர்வுகள் நிறைந்த அன்பு வாரமாக கொண்டாட ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இவ் வாரத்தையொட்டி அன்பின் அடிப்படையிலான மனப்பாங்கை வளர்ப்பதை மையமாகக் கொண்டு பாடசாலை மாணவர்கள் மட்டத்தில் கவிதை, கட்டுரைப் போட்டிகள் நடத்தப்படவுள்ளன. (உ-9)

## புலிகளுடன்

(3ம் பக்கத் தொடர்ச்சி)

தைக் கலைத்து பொதுத்தேர்தல் நடத்துதல் அரசாங்க ஊழியர்களின் சம்பளத்தை 3 ஆயிரம் ரூபாவால் அதிகரித்தல் போன்ற மேலும் சில தீர்மானங்கள் எடுக்கப்பட்டுள்ளன. [உ-5]

## வீதியால்சென்றபெண்மீது இளைஞர் காடைத்தனம்

(மந்திகை)

வீதியால் தன்னந்தனியே சென்று கொண்டிருந்த வேளை, அப்பகுதியால் வந்த இளைஞர் சிலர் கண்டபாட்டில் தாக்கியதால் படுகாயமடைந்த பெண் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

மீசாலை பகுதியில் இருந்து இடம்பெயர்ந்து கரவெட்டியில் வசித்துவரும் நடராசா சுமதி (வயது-31) என்பவரே இவ்வாறு பாதிக்கப்பட்டுள்ளார்.

இது தொடர்பாக நெல்லியடிப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (உ-23)

### வலிகாமம் தெற்கு பிரதேசபை சுன்னாகம்.

# கேள்வி அறிவித்தல்

கேள்விப்பத்திரம் வழங்கும் திகதி: 05,10,2001 — 15.10.2001 பி. ப. 2.00 மணி வரை

கேள்விப்பத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் திகதி ;- 16.10,2001 நண்பகல் 12.00 மணி வரை

கேள்விப்பத்திரம் திறந்துபார்க்கப்படும் திகதி ;- 16.10.2001 பி. ப. 2.00 மணி,

ஒவ்வொரு வேலைக்கும் அதற்கெதிரே காட்டப்படும் மீளளிக்கப்படும் மீளளிக்கப்படாத கட்டணங்களைச் செலுத்துபவர்களுக்கு மட்டுமே கேள்விப்பத்திரங்கள் வழங்கப்படும்.

| | வேலையின் விபரம் | மீளளிக்கப்படும் கேள்விப்பத்திர வைப்புப்பணம் | மீளளிக்கப்படாத கேள்விப்பத்திர வைப்புப்பணம் ஜி. எஸ். ரி. அறவிடப்படும் |
|---|---|---|---|
| | பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டம் | | |
| 01. | முடவேம்படி வெள்ளவாய்க்கால் றோட் திருத்தம் | 2250.00 | 250.00 |
| 02. | சுன்னாகம் புனித அந்தோனியார் குறுக்கு வீதி திருத்தம் | 1500.00 | 150.00 |
| 03. | தாவடி தெற்கு பத்தானை வீதி திருத்தம் | 1500.00 | 150.00 |
| 04. | மயிலணி கந்தசாமி கோயில் வீதி திருத்தம் | 1000.00 | 150 00 |
| 05. | சுன்னாகம் மின்சாரநிலைய வீதி திருத்தம் | 1000.00 | 150.00 |
| 06. | இணுவில் மேற்கு அண்ணா சனசமூக நிலைய வீதி திருத்தம் | 1500.00 | 150.00 |
| 07. | சுன்னாகம் ஐயனார் கோவில் வீதி, மகாளி அமபாள் கோவில் வீதி திருத்தம் | 1500.00 | 150.00 |
| 08. | தாவடி வடக்கு இந்துமயான வீதி திருத்தம் | 1300 00 | 150 00 |
| 09. | தாவடி தெற்கு பாடசாலை வீதி திருத்தம் | 750 00 | 100 00 |
| 10. | இணுவில் செட்டிவீதி திருத்தம் | 750.00 | 100.00 |
| 11. | இணுவில் அண்ணா முன்பள்ளிக்கு தளபாடக் கொள்வனவு | 500.00 | 100.00 |
| 12. | மயிலங்காடு ஸ்ரீமுருகன் முன்பள்ளிக்கு தளபாடக் கொள்வனவு | 500.00 | 100.00 |
| 13. | ஈவினை கலையரசி முன்பள்ளிக்கு தளபாடக் கொள்வனவு | 500.00 | 100.00 |
| 14. | ஈவினை கற்பகவிநாயகர் சனசமூக நிலையத்திற்கு புதிய கட்டிடம் அமைத்தல் | 750.00 | 100.00 |
| 15. | மயிலணி வளர்பிறை முன்பள்ளிக்கு தளபாடம் கொள்வனவு | 500.00 | 100.00 |
| 16. | மயிலங்காடு ஸ்ரீமுருகன் முன்பள்ளி புனரமைப்பு | 1000.00 | 150.00 |
| 17. | தாவடி தெற்கு ஸ்ரீகாளியம்பாள் முன்பள்ளிக்கு தளபாடம் கொள்வனவு | 500.00 | 100.00 |

பூர்த்தி செய்யப்பட்ட கேள்விப்பத்திரங்களின் மூலப்பிரதியை ''தலைவர் வலிகாமம் தெற்கு பிரதேச சபை, சுன்னாகம்'' என்ற முகவரிக்கும், அதன் பிரதியை ''பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர்,உள்ளூராட்சித் திணைக்களம், யாழ்ப்பாணம்'' என்னும் முகவரிக்கும் உரிய காலத்திற்கு முன்னர் பதிவுத் தபாலிலோ அல்லது நேரடியாகவோ அனுப்பி வைக்கப்படல் வேண்டும். கடித உறையின் இடதுபக்கமேல் மூலையில்வேலையின் பெயர் குறிப்பிடப்படல் வேண்டும். மேலதிக விபரம் தேவைப்படுவோர் அலுவலக நேரத்தில் சபையின் பணிமனையில் பெற்றுக் கொள்ளலாம்.

குறிப்பு:- திணைக்களங்களில் பதிவு செய்தவர்களுக்கு மட்டுமே ஒப்பந்தப் பத்திரங்கள் வழங்கப்படும்.

க. கமலசேகரன், (ஜே.பி.யு.எம்)
தலைவர்,
வலிதெற்கு பிரதேசசபை,
சுன்னாகம்.

வலிதெற்கு பிரதேசசபை,
சுன்னாகம்.
2001. 10. 03

## பிற்போடப்பட்டுள்ளது

எமது சங்கத்தால் 01-10-2001இல் நடாத்தப் படவிருந்த அதிர்ஸ்டலாபச் சீட்டிழுப்பு தவிர்க்க முடியாத காரணத்தால் பிற்போடப்பட்டு எதிர் வரும் 10-11-2001 அன்று நடைபெறும் என்பதை அறியத் தருகின்றோம்.

யாழ்ப்பாணம். யாழ். ஊடகவியலாளர் சங்கம்
[3808]

# ஆப்கானிஸ்தானில் ரஷ்யா பின்வாங்கியபின்பும்

# மக்கள் வாழ்க்கை கேள்விக்குறியே!

20ம் நூற்றாண்டிலே ஆப்கான் மக்களின் சுதந்திரப் போராட்டம் மிக முக்கியமானதாகும். 21ம் நூற்றாண்டாகிய இன்றைய கால கட்டத்தில் அமெரிக்கா மீதான தாக்குதல்களின் மூலம் உலகின் முழுக்கவனமும் தலிபான்கள் மீதும் ஒஸாமா பின்லேடன் மீதும் திரும்பியுள்ளதைக் காணலாம்.

### தீவிரவாதிகளின் தாக்குதல்

ஆப்கான மக்கள சோவியத் மீது கடும்போர் செய்ததை என்றும் மறக்க இயலாது. ஆப்கானில் 99 வீதமானோர் முஸ்லிமகளே. 1972 ஆம் ஆண்டுக்கு முன்னர் இஸ்லாமிய அடிப்படை வாத சட்டத்தின் மூலம் ஆப்கான் ஆளப்பட்டது. ஆங்கிலேய அரசியலை இஸ்லாத்திற்குள் புகுத்த முயன்ற ஹபீபுல்லாவை 1916இல் இஸ்லாம் தீவிரவாதிகள் கொன்றனர். இதே செயலை மீண்டும் செய்த லுமானுல்லாஜ் 1928இல தீவிரவாதிகளின தாக்குதலுக்கு இலக்காகி மரணமானார். 1842இல் 12000 பேரைக் கொண்ட பிரித்தானியப் படைப்பிரிவு முற்றாகத் தாக்கி அழிக்கப்பட்டது. ஒரு வீரன் மட்டுமே உயிர் தப்பினான்.

### சோவியத் யூனியன் ஆக்கிரமிப்பு

1979ஆம ஆண்டு டிசம்பரில் சோவியத் இராணுவம் ஆப்கானை ஆக்கிரமித்ததற்கு ஆப்கானில் வேகமாக வளர்ந்து வரும் அடிப்படை வாதமே பின்னணி ஆகும். ஏனெனில், சோவியத் யூனியனின் கட்டமைப்பிலே காணப்பட்ட முஸ்லிம் நாடுகளான தஜகிஸ்தான், உஸ்பெக்கிஸ்தான், துருக்மானிஸ்தான் ஆகிய நாடுகளுக்கு ஆப்கானிஸ்தானின் அடிப்படை வாதம் பரவிவிடும் என்ற பயமும், அராபியக் கடலில தனது ஆதிக்கத்தை நிலை நாட்டுவதும சோவியத்தின் நோக்கமாகும். இவற்றுடன் சேர்த்து தனது சோஸலிசக் கொள்கைகளைத் திணிப்பதும் அதன் தூர நோக்காக இருந்தது.

தனதுதிட்டத்தில் முதலாவதாக 15 ஆண்டுகளுக்கு முன்பே கனரக வாகனங்கள செல்லக்கூடிய பாதை ஒன்றை அமைத்தது.

1933ஆம் ஆண்டிலே சோவியத்தின் கைப்பொம்மையான முகம்மத் தாவூத் சோவியத்தின் உதவியைப் பெற்று ஆட்சியைக் கைப்பற்றி இஸ்லாத்திற்கு எதிராகக் கடுமையாக செயற்பட்டார்.

### சதிப்புரட்சி

சோவியத்தின் ஆதிக்கத்தை முறியடிக்கவும் இஸ்லாத்தைப் பாதுகாக்கவும் பேராசிரியர் முகமத்தியோஸி தனதுமாணவர்களை இணைத்து ஒரு புதிய இயக்கதை உருவாக்கினார். இந்தச் செயல் தான் முஜாஹிதீன்களின் தோற்றத்திற்கு வழிவகுத்தது. அடுத்து வந்த ஆட்சியாளர் இஸ்லாமிய புரட்சிவாதத்தை ஒழிப்பதற்கு தீவிரமாக ஈடுபட்டனர். அதில் முதற்கட்டமாக இஸ்லாமிய இயக்கத்தைச் சேர்ந்த சுமார் 600 இளைஞர்கள் கோரமாகக் கொன்று குவிக்கப்பட்டனர். ஆனால மக்கள் ஆதரவும் உறுதியான மனத்தையும் கொண்ட முஜாஹிதீன்களை முற்றாக அழிக்க முடியவில்லை. அதன பின்னர் ஒரு திட்டமிட்ட சதிப்புரட்சியின் மூலம் தவூத் விரட்டப்பட்டு தாரகி தாவூத் ஆட்சியைக் கைப்பற்றினார்.

ஆப்கானிஸ்தான் வரலாற்றிலே கறைபடிந்தகாலம் இவரின் ஆட்சியிலே ஆரம்பமாகியது. தாரகி தாவூத ஆரம்பத்திலே இஸ்லாமிய இயக்கத்துடன் தொடர்புபட்டவர்கள் என்ற சந்தேகம் கொண்டு 15000 அப்பாவி மக்களைக் கொன்று குவித்தான். இஸ்லாத்தைப்பற்றி பேசுவதற்கோ கற்பிப்பதற்கோ வெகுஜன தொடர்புசாதனங்கள் மீது இறுக்கமான தடை போடப்பட்டது, சோஷலிச சித்தாந்தம் கட்டாயமாக்கப்பட்டது.

### படுகொலைகள்

ஆப்கானின முஸ்லிம் இளைஞர்கள் இச்சம்பவங்களின் பின் ஏகாதிபத்தியத்திற்கு எதிராக அணிதிரண்டனர். நாடெங்கும் கிளர்ச்சிகள் நடந்தன. நிலைமையை உணர்ந்த தாரகி மூர்க்கமானான். ஒரே நாளில் 30,000 மக்களைப் படுகொலை செய்தான். கர்கலா என்ற கிராமத்தைச் சேர்ந்த 111 இளைஞர்கள் கோரமாகக் கொல்லப்பட்டனர். தாரகி காலத்திலே இரண்டு இலட்சம் பேர் யுத்தம் காரணமாக இறந்தனர். இதுதான் ஆப்கான் வரலாற்றிலே படுகொலைகள் உச்சக்கட்டத்தை அடைந்த காலமாகும்.

அந்தக்கால கட்டத்திலே முஜாஹிதீன்களுக்கு ஆதரவு பெருகியது. பொம்மை, ஆட்சியைத் தக்கவைப்பது கடினம் எனக்கண்ட ரஷ்யா, ஆப்கான் மண்ணில் பாதம் பதித்தது. ஈரான், பாகிஸ்தான் போன்றநாடுகளின் தலையீட்டைத்தடுப்பதற்காகவே ஆப்கானுக்கு தான்வந்ததாகவும தனது படைகள் தற்காலிகமாகவே தங்கும் என்றும் பிரசாரம் செய்தது.

தொகுப்பு

**செ. குமாரதாசன்**

### இரத்தக்களரி ஆரம்பம்

இதனுடன்தான் இரத்தக் களரி ஆரம்பமானது. தீவிரவாதத்தை அழிப்பது என்ற பெயரில் அப்பாவிப்பொதுமக்கள் கொன்றுகுவிக்கப்பட்டனர். சர்வதேச ரீதியில் தடை செய்யப்பட்ட கிளஷ்டர், இரசாயன, உயிரியல் ஆயுதங்கள ஆப்கான் மக்கள மீது பரிசோதனை செய்யப்பட்டு உறுதி செய்யப்பட்டது.

அட்டூழியங்களைப் பொறுக்கமுடியாத மக்கள் உயிரைக் கையில் பிடித்துக்கொண்டு ஈரான், பாகிஸ்தான் நோக்கிச் சென்றனர். அந்நிலையில் நோய்கள, உணவு இன்றி இறந்தவர்கள் என்று பார்த்தால் அது ஒரு தனிவரலாறு. அப்போது மக்கள் 100 க்கு 37 என்ற விகிதத்தில் மரணமடைந்தார்கள்.

அகதி முகாம்களில்பயங்கர நோய்கள் தலைவிரித்தாடியது. மலேரியா,வயிற்றோட்டம், தோல் நோய்கள் என்பன பரவின. இதைவிட மன நோய் அதிகமாகக் காணப்பட்டது. சோவியத் இராணுவமும் கூலிப்பட்டாளமும சொல்லொணாக் கொடுமைகளைச் செய்தன.

### பனிப் போர்

அன்றைய கால கட்டத்திலே இரு வல்லரசுகளுக்கும் இடையில்பனிபபோர் நடந்து கொண்டு இருந்தது. அப்போது அமரிக்கா மனிதஉரிமைகள் பற்றி உரத்துப் பேசியது. ரஷ்யாவை வீழ்த்துவதற்கு நல்ல தருணம் பார்த்துக் கொண்டிருந்தது. அமெரிக்கா இஸ்லாமிய இயக்கங்களுக்கு நிதி, ஆயுத உதவிகளை அளித்தது டாங்கிகள, ஏவுகணைகள, விமான எதிர்ப்பு கவச எதிர்ப்பு ஆயுதங்கள் என்பனவற்றைத் தாராளமாகவே போராளிக்கு வழங்கியது. போராளிகளுக்கும் சோவியத் இராணுவததிற்கும் இடையே பல சண்டைகள் நடந்தன. ஆப்கானிஸ்தான் ஒரு குட்டி வியட்நாமாக மாறியது. இரு வல்லரசுகளுக்கிடையே பலப்பரீட்சையில் சிக்கி ஆப்கான் மக்கள் சொல்லொணா துன்பங்களை அனுபவித்தனர். ஆப்கான் போராளிகளின் தகவல்களின் படி சோவியத்திற்குச் சொந்தமான 1000 விமானங்களும் 8000 யுத்த டாங்கிகளும் செயற்பட இயலாது போயின. அல்லதுஅழிக்கப்பட்டன. ரஷ்யப்படையில்20,000 பேர் இறந்தனர்.

1988 ஆம் ஆண்டு தனது மூட்டை முடிச்சுக்களுடன் சோவியத் இராணுவம் வெளியேறிச் சென்றபன் ஆப்கானில் உள்நாட்டுக் குழப்பங்கள் மூண்டன. விடுதலை இயக்கங்களிலே தலிபான், அதன் எதிரணிப்படை ஆகியன பலம் வாய்ந்த அமைப்புக்களாக இன்று காணப்படுகின்றன. இவை இப்போது தமக்குள் சண்டையிட்டுக் கொண்டிருக்கின்றன. அண்மையில் எதிரணிப்படை தலிபான் கேந்திர நிலைகள் மீது விமானத்தாக்குதல் மேற்கொண்டமை தெரிந்ததே. போர்கள் தொடர்கதையாகி விட்ட நிலையில் ஆப்கான் மக்களின் நிலையே இன்று கேள்விக்குறியாகி விட்டது. □

## விண்ணப்பம்

### கோரல்

(கொழும்பு)

வடக்கு-கிழக்கு மாகாணத்தில் உள்ள அரச அலுவலகங்களில் கணனி தரவு பதிவு இயக்குநர், கால்நடை அபிவிருத்தி போதனாசிரியர் ஆகிய பதவிகளுக்கு விண்ணப்பங்களை மாகாண பொதுச் சேவை ஆணைக்குழு கோரியுள்ளது.

இவ்விண்ணப்பங்கள் இம் மாதம் 15ஆம்திகதிக்கு முன் அனுப்பிவைக்கப்பட வேண்டும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (உ-3)

★ ★ ★

அரசாங்க நிர்வாக உள் நாட்டலுவல்கள் நிர்வாக மறு சீரமைப்பு அமைச்சினால் உதவி நிகழ்ச்சித்திட்ட தயாரிப்பாளர் பதவிக்குவிண்ணப்பம் கோரப்பட்டுள்ளது

இவ்விண்ணப்ப முடிவுத் தினம் இம் மாதம் 19 ஆம் திகதியாகும்.

★ ★ ★

பொது எழுதுநர்சேவையின் அதிசிறப்பு வகுப்புக்கு நியமனம் செய்வதற்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சைக்கான விண்ணப்பங்களை இம் மாதம் 30 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்கப்பட வேண்டும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (உ-3)

## சென்றமாத மழைவீழ்ச்சி 268.8 மி.மீ

(யாழ்ப்பாணம்)

செப்ரெம்பர் மாத சராசரி மழைவீழ்ச்சியாக 268.8 மில்லிமீற்றரும் உயர்வு வெப்ப நிலையாக 34.8 பாகை செல்ஸியஸும் இழிவு வெப்ப நிலையாக 22.8 பாகைசெல்சியஸும் பதிவாகியுள்ளதாக வளிமண்டல ஆராய்ச்சி நிலைய புள்ளி விபரங்கள் தெரிவிக்கின்றன. (உ-106,19)

## 4 வது ஆண்டு நினைவு தின கூட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின்முன்னாள் தலைவர் அமரர் எஸ்.ரி தர்மலிங்கத்தின் 4 வது ஆண்டு நினைவு தினக் கூட்டம்நேற்று மு.ப 10.00 மணிக்குஸ்ரீ.சு.க யாழ். அலுவலகத்தில் செயற்குழு உறுப்பினர் ஆர் பி ஜெயதாஸ் தலைமையில் இடம் பெற்றது. (உ-19)

### யுத்தத்தை நிறுத்தி

# புலிகளுடன் பேசித் தீர்வு காண அரசைக் கோரத் தீர்மானம்

(கொழும்பு)

பொதுஜன ஐக்கியமுன்னணி அரசும் ஜே.வி.பியும் செய்து கொண்டஉடன்படிக்கையால தமிழர்களுக்கு எதுவிதவிமோசனமும் கிடைக்கப்போவதில்லை.

எனவே உடனடியாக யுத்தத்தை நிறுத்தி விடுதலைப் புலிகளுடன் பேசி இனப்பிரச்சினைக்கு நீதியான தீர்வு ஒன்றை காணவேண்டுமென ஜனாதிபதியை கோரும் தீர்மானமொன்றை அரசாங்க பொது ஊழியர் சங்கம் நிறைவேற்றியுள்ளது.

சங்கத்தின் மத்திய நிறைவேற்றுக் குழுக்கூட்டம்சங்கத் தலைவர் எஸ். லோகநாதன் தலைமையில் கல்முனை வெஸ்லி உயர்தரப் பாடசாலையில் நடைபெற்றது.

அக்கூட்டத்தில் அரசாங்கம் உடனடியாக பாராளுமன்றத்

(02ம் பக்கம் பார்க்க)

## வடமராட்சிப்பகுதியில் காய்ச்சல் நோய் தீவிரம்

(மந்திகை)

வடமராட்சிப் பகுதியில் கடந்தசிலதினங்களாக காய்ச்சல் நோய் தீவிரமாகப் பரவி வருவது அவதானிக் கப்பட்டுள்ளது.

பருத்தித்துறை, பொலிகண்டி, புலோலி, கரவெட்டி உடுப்பிட்டிப் பகுதிகளில் காய்ச்சலினால் அதிகம் பேர் பீடிக்கப்பட்டுள்ள தாகவும், இப்பகுதியைச் சேர்ந்த 12 வயதுக்குட்பட்ட 25இற்கும் அதிகமான சிறுவர்கள் காய்ச்சல் நோயினால் பீடிக்கப்பட்டு வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்றிருப்பதாகவும் வைத்தியசாலைப் புள்ளி விபரங்கள் தெரிவிக்கின்றன.

இதேவேளை, அண்மையில் பெய்த கடும்மழை காரணமாகவே இக்காய்ச்சல் பரவி வருவதாக அறியப்படுகிறது. (உ-23)

## பாராட்டு விழா

(நெடுந்தீவு)

நெடுந்தீவு மங்கையற்கரசி வித்தியாலய முன்னாள் அதிபர் திரு குமாரசாமி லிங்கநாயகம் அவர்களை பாராட்டிக் கௌரவிக்கும் நிகழ்வு இன்று பிற்பகல் 3.30 மணியளவில் வித்தியாலய மண்டபத்தில் அதிபர் கோ. பத்மநாதன் தலைமையில் நடைபெறவுள்ளது. (வ)

## பதில் அதிபர்கள் அமைச்சருக்கு கடிதம்

(யாழ்ப்பாணம்)

யாழ் மாவட்ட பதிலதிபர்களை நிரந்தர அதிபர் சேவையில் உள்வாங்குதல் செய்யப்படுகையில் பாதிப்படையவுள்ளவர்கள் தமது நிலையை விளக்கி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவுக்கு கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளனர்.

ஆசிரிய பயிற்சிக் கலாசாலையில் இருந்து வெளியேறிய கால ஆண்டு 5 என்பதை 3 ஆகவும,

4.8.2000 ஆம் ஆண்டில் ஒரு வருடம் பூர்த்தி செய்திருக்க வேண்டும் என்ற நிபந்தனையைத் தளர்த்தி குறைந்த பட்சம் 9 மாத காலம் பதில் அதிபர்களாக சேவை புரிந்திருக்க வேண்டுமென்ற இவ் இரு கோரிக்கைகளையும் முன்னெடுத்து கல்வி உயர் கல்வி அமைச்சரின் கவனத்திற்கு சமர்ப்பித்து பாதிக்கப்படவுள்ள பதில் அதிபர்களான தம்மைக் காப்பாற்றுமாறு அக்கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. (உ)

## சுகவாழ்வு

எயிட்ஸ் நோயாளியென அடையாளம் காணப்பட்ட ஒருவரை உங்களிலிருந்து விலக்காதீர்கள். உங்கள் அன்பும், அரவணைப்பும் எப்போதும் அவருக்குத் தேவை: (எயிட்ஸ் வருமுன் காப்போம்)

-தரிசனம்-

# நாம் உலகதரிசனத்தை முழுமையாக கண்டுணர
# ஆங்கிலக் கல்வியை தாய்மொழியோடு
# சமாந்தரமாக முன்னெடுத்து செல்ல வேண்டும்

## ஆபிரிக்க கவிதைகள் நூல் வெளியீட்டு விழாவில் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

மீண்டும் ஆங்கிலக்கல்வியை எமது தாய்மொழியோடு சமாந்தரமாக முன்னெடுத்துச் சென்றால் மட்டுமே உலக தரிசனத்தைக் கண்டு கொள்ளமுடியும்.

வேற்றுக் கலாசார பண்பாட்டுக் கற்பனை, உளவியல் கற்பனை மற்றும் அந்தந்த நாட்டு மக்களின் நாளாந்த வாழ்க்கையில் தோய்ந்து வெளிவரும் பிறநாட்டு இலக்கியங்கள் தமிழில் மொழி பெயர்க்கப்பட்டால் அது எமக்கு வளம் சேர்ப்பதாக அமையும்.

யாழ். பல்கலைக்கழகத் தமிழ் மன்ற ஆதரவில் சோ. பத்மநாதனின் ''ஆபிரிக்கக் கவிதை'' நூல் வெளியீட்டு விழா செவ்வாய்க்கிழமை பல்கலைக்கழக நூலக கேட்போர் கூடத்தில் பண்டிதர் க. சச்சிதானந்தன் தலைமையில் நடைபெற்ற போது வெளியீட்டுரை நிகழ்த்திய பேராசிரியர் சபா. ஜெயராசா இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் உரையாற்றுகையில்;

கவிதைகளை மொழி பெயர்ப்பது கடினமான செயல். அதற்கு சம்பந்தப்பட்ட இரு பண்பாடுகளிலும் தெளிவு முக்கியம்.

ஆபிரிக்கக் கவிதைகளில் கறுப்பின மக்களின் உணர்வுகள் பல்வேறு வீச்சுக்களோடு உணர்வுக் கோலங்களாக காணப்படுகின்றன.

இவற்றை எமது மொழிக்கு மாற்றும் போது இலக்கியம் சார் பல்வேறு இடர்ப்பாடுகளை எதிர்நோக்க வேண்டி ஏற்படுகிறது.

அக்கவிதைகளில் கூட்டு நனவிலியின் வெளிப்பாடு உள்ளார்ந்த பண்பாக இருக்கிறது. தமிழ், ஆங்கிலம் இணைந்த மரபுக்கு கலாநிதி இ. முருகையன், சாந்தன், சோ. ப. போன்றோரும் குறிப்பிடத்தக்கவர்களாக அமைகிறார்கள் என்றார்.

கலாநிதி சி. சிவலிங்கராசா தொடக்கவுரை ஆற்றுகையில்;

ஈழத்துத் தமிழ்க் கவிதை இலக்கிய உலகிற்கு தனது ஆற்றலின் வெளிப்பாடு காரணமாக வலுச்சேர்த்துள்ள சோ. ப. அவர்கள் யாப்பு சந்தம், ஓசை பிசகாது தமிழில் மரபு நெறி நின்றுகவிதை படைப்பவர்.

இயல்பானகவிதாபாத்திரம் அவரிடம் இருப்பதனாலும் தனது ஆங்கிலப் புலமையினாலும் ஆபிரிக்க மக்களின் உணர்வுகளை முழுமையாக உள்வாங்கியுள்ளார் என்றார்.

(உ-106)

## 18 வருடங்களின் பின்
## 749 ஆம் இலக்க
## பேருந்து சேவை ஆரம்பம்

(மானிப்பாய்)

கடந்த 18 வருடங்களாகத் தடைப்பட்டிருந்த தெல்லிப்பழை யாழ்ப்பாணம் இடையேயான 749 ஆம் இலக்கப் பேருந்துச் சேவை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் பணிப்பின் பேரில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

நேற்றைய தினம் மு.ப 10.30 மணிக்கு வலி தென் மேற்கு பிரதேச சபைத் தலைவர் வெலிச்சோர் அன்ரன் ஜோன்சன் வைபவ ரீதியாக இப் பேருந்துச் சேவையை ஆரம்பித்து வைத்தார்.

மேற்படி சேவை தெல்லிப்பழையில் இருந்து காலை 7.00, 9.15, 11.20 மணிக்கும் பி.ப 2.15, 4.20 மணிக்கும் இடம்பெறும்.

யாழ்ப்பாணத்தில் இருந்து காலை 8.15, 10.20 மணிக்கும் பி.ப 1:15, 3.20, 6.00 மணிக்கும் இடம்பெறும்.

(உ-232)

## அழிவைத் தடுக்க
## அவசர நடவடிக்கை
## கட்சிகள் எடுக்க வேண்டும்
### சமாதானப் பேரவை

(கொழும்பு)

கேணல் சங்கர் எனப்படும் சொர்ணலிங்கம் என்பவரது படுகொலை தொடர்ச்சியான வன்செயலையும் இராணுவ நடவடிக்கைகளையும் தூண்டவல்லது. இதனால் ஏற்படக்கூடிய மனித அழிவுகள் மக்கள் இதற்குமுன் கண்டிராத அளவு பெரிதாக இருக்கும்.

இவ்வாறு சமாதானப் பேரவை விடுத்த அறிக்கையில் தெரிவித்துள்ளது. சமாதான நடவடிக்கைகள் இன்றைய அரசியல் நிகழ்ச்சி நிரலில் இருந்து நீக்கப்பட்டுள்ளமை குறித்து அந்த அறிக்கையில் கவலை தெரிவித்துள்ள பேரவை, சமாதான நடவடிக்கைகள் மிகவும் அவசரமானவை என்பதைக் கருத்திற் கொண்டு சகல அரசியல் கட்சிகளும் அவற்றை முன்னெடுத்துச்செல்ல வேண்டும் என்று சுட்டிக்காட்டியுள்ளது. (எ)

## பயண அனுமதி
## வழங்கப்பட்டோர் விபரம்

(தொடர்ச்சி)

ஒக்டோபர் மாதம் 2.10.2001 ஆம் திகதி வெளியிடப்பட்ட பட்டியலின்படி, வெளிமாவட்டங்களுக்குப் பயணம்செய்ய அனுமதி வழங்கப்பட்டவர்களின் இலக்கங்கள் பிரதேச ரீதியாகத் தரப்படுகின்றன.

### சங்கானை

| | | | |
|---|---|---|---|
| 193759 ஏ | 203683 ஏ | 205589 சி | 205589 டி |
| 203683 பி | 203683 சி | 205589 ஈ | 205957 ஏ |
| 203683 டி | 203715 ஏ | 205957 பி | 205957 சி |
| 203779 ஏ | 203836 ஏ | 205957 டி | 206101 ஏ |
| 203836 பி | 203836 டி | 206101 பி | |
| 203837 ஏ | 20465 ஏ | | |
| 20465 பி | 205302 ஏ | | |
| 205316 ஏ | 205365 ஏ | | |
| 205425 ஏ | 205425 பி | | |
| 205498 ஏ | 205498 பி | | |
| 205498 சி | 20551 ஏ | | |
| 20551 பி | 205585 ஏ | | |
| 205586 ஏ | | | |
| 205589 ஏ | 205589 பி | | |

### யாழ்ப்பாணம்

| | |
|---|---|
| 208362 ஏ | 208362 பி |
| 208362 சி | 208362 டி |
| 208844 ஏ | 201909 ஏ |
| 211909 பி | 212080 ஏ |
| 212080 பி | 212080 சி |
| 212080 டி | 212123 ஏ |
| 212216 ஏ | 212216 பி |
| 212216 சி | 212216 டி |
| 212216 ஈ | 213261 ஏ |
| 213261 பி | 213276 ஏ |
| 213276 பி | 213276 சி |
| 213287 ஏ | 213289 ஏ |
| 213289 பி | 213289 சி |
| 213289 டி | 213292 ஏ |
| 213301 ஏ | 213301 பி |
| 213317 ஏ | 213317 பி |
| 213319 ஏ | 213319 பி |
| 213327 ஏ | |

## கோவிற் கடவையில்
## ஆயுதமுனையில்கொள்ளை

(மந்திகை)

வீட்டிலுள்ளவர்களை மிரட்டி, ஆயுத முனையில் கொள்ளையிட்ட சம்பவம் ஒன்று துன்னாலை கோவிற் கடவைப் பகுதியில் இடம் பெற்றுள்ளது.

கடந்த ஞாயிறன்று, சோரன் பற்றில் இருந்து இடம் பெயர்ந்து வசிக்கும் நடராசா என்பவரது வீட்டிலேயே இச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

பெண்கள் அணிந்திருந்த தங்க நகைகள் மற்றும் பெறுமதி மிக்க உடு புடவைகள் இவ்வாறு திருட்டுப் போயுள்ளமை தொடர்பாக நெல்லியடிப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

(உ-23)

## இறுக்கமான காலகட்டத்திலும்
## நீதியை நிலைநாட்ட அரும்
## பாடுபட்டவர் யோகசிகாமணி
### அஞ்சலி உரையில்மேல் நீதிமன்ற நீதிபதி

(யாழ்ப்பாணம்)

அர்ப்பணிப்புடன் சேவையாற்றிய வவுனியா மாவட்ட மேல்நீதி மன்ற நீதிபதிஅமரர் ந.யோக சிகாமணி சகிப்புணர்வு, மனிதநேயம், கருணையுள்ளம் கொண்டவர்.

சமூகத் தொண்டனாகவும் சமய, கலை, இலக்கியத்துறை ஆர்வலராகவும் செயற்பட்ட இவர் சட்டத் தொழிலிலும் மிகத் திறமை வாய்ந்தவர்.

யாழ்ப்பாணம் மேல் நீதிமன்ற நீதிபதி கே.பி எஸ். வரதராசா கடந்த திங்கட்கிழமை மேல் நீதிமன்றில் யாழ்.சட்டத்தரணிகள் சங்கம் ஏற்பாடு செய்த அமரர் யோகசிகாமணியின் நினைவு அஞ்சலிக் கூட்டத்தில் உரையாற்றுகையில்இவ்வாறு தெரிவித்தார்.

இந்நிகழ்வில் யாழ். நகரபிதா ந.ரவிராஜ் உட்பட சட்டத்தரணிகள்பலர்கலந்து கொண்டனர்.

நீதிபதி கே.பி.எஸ்.வரதராசா மேலும் உரையாற்றுகையில்,

யோகசிகாமணி தொழிலில் திறமையானவர். ஒரு முறை இறுக்கமான சூழ்நிலையில் ஒருமாதத்திற்குள் 68 வழக்குகளை முடித்து தன் திறமையை வெளிக்காட்டினார்.

1989 ஆம் ஆண்டில் நீதிமன்றம் இயங்காத போதும், பல வழக்குகளைநடத்தி தீர்ப்பளித்து நீதியைக் காப்பாற்றினார்.

இரக்கசிந்தனையுள்ள ஒரு மனிதனை இழந்தது எமக்கு மீளமுடியாத துயரத்தைத் தருகிறது.என்றார்.

சட்டத் தரணிசாந்தா அபிமன்ன சிங்கம் தனது அஞ்சலியுரையில்.

1942 ஆம்ஆண்டுவல்வெட்டித்துறையில் பிறந்த நீதிபதி யோகசிகாமணி 1973இல் சட்டக் கல்லூரியில் தனது இறுதிப் பரீட்சையில் சித்தியடைந்தார்.

அவர்1987முதல்1998வரை யாழ்.மாவட்ட நீதிவானாகக் கடமையாற்றி யாழ். மக்களின் மனதில் இடம்பிடித்தவர். சட்டத்தில் மாத்திரமன்றி ஆன்மீகத்திலும் மிகுந்த ஈடுபாடு உடையவர்என்றார்.

(உ-106,19)

## இராசி பலன்

4/10/2001
புரட்டாதி 18 வியாழன்
துதியை மு.இ. 9.54 வரை
அச்சுவினி பி.இ 1.55 வரை
இராகுகாலம் 1.32 - 3.02
சுபநேரம் 7.32 - 9.02
அமிர்தசித்தம்

**மேடம்**
நல்ல முயற்சி, ஜனவசியம், காரிய நன்மை, நண்பர்கள் உதவி.

**இடபம்**
காரிய அலைச்சல், பொருள் விரையம், உறவினர் மனஸ்தாபம், பிரயாணம்.

**மிதுனம்**
குடும்ப சுகம், காரிய அனுகூலம், தெய்வசிந்தை, பொருள் சேர்க்கை.

**கடகம்**
அதிக பிரயாசை, நல்ல செய்தி, தொழில் சிறப்பு, முயற்சி கைகூடும்.

**சிங்கம்**
புதிய திட்டம், அச்சமான நிலை, உடல் சோர்வு, முயற்சி தாமதம்.

**கன்னி**
நண்பர் வெறுப்பு, பிரயாண பயம், காரிய தடங்கல், உடல் வியாதி.

**துலாம்**
விருந்துபசாரம், வரவேற்பு, பிரயாணம், முயற்சி வெற்றி.

**விருச்சிகம்**
காரிய நன்மை, நல்ல செய்தி, உடல் ஆரோக்கியம், தனலாபம்.

**தனுசு**
நிலைக்கேடு, மனச்சோர்வு, தொழில் நன்மை, காரிய தாமதம்.

**மகரம்**
தாய்வழி உறவு, மனச் சஞ்சலம், முயற்சி தாமதம், வியாதி.

**கும்பம்**
கூட்டு முயற்சி, அந்நியர் சந்திப்பு, காரியம் கைகூடும், குடும்ப சுகம்.

**மீனம்**
வாக்குக் கலகம், பெண்கள் உதவி, அபகீர்த்தி, முயற்சி தாமதம்.

(பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது)

வளவன்

## பாக். விருத்த அழைப்பை
## இலங்கை கிரிக்கெட்
## கட்டுப்பாட்டுச் சபை ஏற்பு

(கொழும்பு)

மூன்று ஒரு நாள் போட்டியில் விளையாடுவதற்காக குறுகிய கால சுற்றுப் பயணம் ஒன்றை மேற்கொள்ளுமாறு பாகிஸ்தான் விடுத்த அழைப்பை இலங்கை கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை ஏற்றுக்கொண்டுள்ளது.

எனினும் இலங்கை வெளிவிவகார அமைச்சும், பாகிஸ்தானில் உள்ள இலங்கை தூதரகமும் எடுக்கும் இறுதி முடிவைப் பொறுத்தே இச் சுற்றுப் பயணம் சாத்தியமாகும் என்று இலங்கை கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை கூறி உள்ளது.

அனுமதி கிடைத்தால் இம்மாத முற்பகுதியில் இச்சுற்றுப் பயணம் இடம்பெறும் என்றும் இலங்கை கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை அறிவித்துள்ளது.

(உ-8)

### மத்துகம நீதவான் நீதிமன்ற
## ஆவண காப்பகத்திற்கு தீ வைப்பு
## முக்கிய கோவைகள் எரிந்து நாசம்

(கொழும்பு)

மத்துகம நீதவான் நீதிமன்றத்தின் ஆவணக் காப்பகத்திற்கு இனந்தெரியாத சிலரால் தீ வைக்கப்பட்டுள்ளது.

நேற்று அதிகாலை 1.45 மணியளவில் இனந்தெரியாத 6 பேர் கொண்ட குழு நீதிமன்ற காவலாளியைக் கட்டி விட்டு ஆவணக்காப்பகத்திற்கு தீ வைத்தபின் காவலாளி கடுமையாகத் தாக்கி விட்டு தப்பிச் சென்றுள்ளதாக மத்துகம தலைமைப் பொலிஸ் இன்ஸ்பெக்டர்தெரிவித்தார்.

இதுபற்றி மத்துகம நீதிமன்ற நீதிவான் மகிந்தபெனதெனிய கருத்து தெரிவிக்கையில், 40 ஆயிரம் வழக்குகள் தொடர்பான ஆவணங்களும் 17 ஆயிரம் வழக்குகள் தொடர்பான முக்கிய கோவைகளும் எரிந்து சாம்பலாகியுள்ளதாகவும்,

தீ பரவி 3 மணி நேரத்தின் பின்னரே அணைக்கப்பட்டதாகவும் தெரிவித்தார்

(உ-7)

## இன்று ஒரு தகவல்

# நம்பிக்கை தான் முக்கியம்

அந்த ஆள் மிகவும் நல்லவன் என்றுநினைத்துக்கொண்டிருந்தேன். கடைசி நேரத்திலே காலைவாரி விட்டு விட்டான் சார் என்று சொல்லி அலுத்துக் கொள்கிறவர்கள் இந்த உலகத்தில்பலர்உண்டு. ஒருவனை நல்லவன் என்றுநம்பிக் கொண்டிருந்து. அவன் வேறுவிதமாக நடந்துகொண்டான் என்றால் நமக்கு மிகவும் கஷ்டமாகப் போய்விடுகிறது; அதே மாதிரி குறை நம்மிடமும் உண்டு; இந்த உலகத்தில் எதையும் நல்ல விதமாகஎடுத்துக் கொள்கிறவர்களும். கெட்ட விதமாக எடுததுக் கொள்கிறவர்களும் உண்டு.

நீங்கள் எந்த நிறக்கண்ணாடியைமாட்டியிருக்கிறீர்களோ அதே நிறமாகத்தான் இந்த உலகமும் தெரியும் என்று சொல்கிறார்களே அது இதைத்தான். புத்தருடைய சீடர் ஒருவர் இருந்தார். அந்தப் புத்தபிக்கு தீட்சை வாங்கிக்கொண்டு தர்மப் பிரசாரத்துக்காக வெளியூர்புறப்படுவதற்கு இருந்தார். அந்த நேரத்தில் புத்தர் அந்தச் சீடரைக் கூப்பிட்டு விசாரித்தார். 'நீ எந்தப்பிரதேசத்திலேதர்மயாத்திரை செய்யப் போகிறீர்' என்றார். 'சுவாமிநான் சூனா பராந்தகம் என்னும் பிரதேசத்தில் தர்மப்பிரசாரம் செய்யப் போகிறேன்' என்றார் அவர்.

'அந்தப் பகுதியிலே உள்ள ஜனங்கள் உன்னைத் திட்டினால் நீ என்ன செய்வாய்' என்று கேட்டார். 'நான் சந்தோஷப் படுவேன்' என்றார் அவர். ஏன் என்றுகேட்டார் புத்தர். 'நல்லவேளை அவர்கள் திட்டுகிறதோடு விட்டார்களே, அடிக்கவில்லையே, அதனால் அவர்கள் மிகவும் நல்லவர்கள் என்று நினைப்பேன். சரி! அவர்கள் உன்னை அடிக்கிறார்கள் என்று வைத்துக்கொள். அப்போதுஎன்னசெய்வாய் என்றார். அடாடா இவர்கள் எவ்வளவு நல்லவர்கள். ஆயுதத்தினாலேதாக்காமல் இப்படி வெறுங்கையாலேயே அடிக்கிறதோடு நிறுத்திக் கொள்கிறார்களே என்று நினைத்துச் சந்தோஷப்படுவேன் என்றார். சரி! ஆயுதத்தாலேயே அவர்கள் தாக்கிவிடுவார்கள் என்று வைத்துக்கொள். அப்போது என்ன நினைப்பாய்என்றுகேட்டார்.

'ஆகா! இவர்கள் எவ்வளவு நல்லவர்களாக இருக்கிறார்கள். பிறவி என்கிற தளையிலேயிருந்து விடுபட இந்தஉலகத்திலே ஒவ்வொருவரும் என்ன பாடுபட்டிருக்கிறார்கள். ஆனால் நான் மிகவும் சுலபமாக முத்தியடைவதற்கு இவர்கள் உதவி செய்கிறார்களே! இவர்களை எவ்வளவு போற்றினாலும் போதாது என்று நினைத்துச் சந்தோஷப்படுவேன் என்றார் அந்தச் சீடர். உடனே புத்தர் அந்தச் சீடரை மனப்பூர்வமாக வாழ்த்தி வழி அனுப்பி வைத்தார். இப்போது அந்தச் சீடர் மனோநிலையை நீங்கள் கொஞ்சம் நினைத்துப்பாருங்கள்;

அவர் பார்வையிலே இந்த உலகத்திலே எல்லாருமே நல்லவர்கள் தான். அந்த அளவுக்கு பக்குவம் ஏற்பட்டுப் போய்விட்டது அவருக்கு! சிலர் பார்வை வேறுவிதமாக இருக்கும். அடுத்தவர்கள் நல்லது செய்தாற்கூட அதை நல்ல விதமாக இவர்களுக்கு எடுத்துக் கொளளத் தெரியாது. ஒருபெரியமனிதர்இருந்தார். அவருக்குத் தெரிந்த ஒருவர் ஒருநாள் அவரைத் தேடிவந்தார். 'ஒரு 50 ரூபா இருந்தாற் கொடுங்கள். அடுத்த திங்கட்கிழமை கொடுத்து விடுகிறேன் என்றார். அவர் திருப்பிக் கொடுப்பார் என்ற நம்பிக்கையில்லை இவருக்கு. இருந்தாலும் கொடுத்தார். ஆனால் பாருங்கள் அந்த ஆள் சொன்னபடியே சரியாக அடுத்ததிங்கட் கிழமை திரும்பிவந்தார் 50 ரூபா பணத்தைத் திருப்பிக் கொடுத்து விட்டுப் போனார்;

ஒருமாதம் கழித்து அதே ஆள மறுபடியும்இவரிடம்வந்து ஒரு 50ரூபாகடன் வேண்டும் என்றார். அந்தப் பெரிய மனிதர் 'உன்னை நம்பிக் கடன் கொடுக்க முடியாது போ' என்று மிகவும் கோபமாக சொன்னார். என்னங்க இது? போன தடவைகூட சொன்னபடி சொன்ன நாளிலே பணத்தைத் திருப்பிக் கொடுத்தேனே. என்னை நம்ப முடியாது என்று சொல்கிறீர்களே என்றார். ஆமாம் போன தடவை உன்னிடம் நான் பணம் கொடுக்கிறபோது அதை நீ திருப்பிக் கொடுக்க மாட்டாய் என்று மனப் பூர்வமாக நம்பினேன். ஆனால் நீ அந்த நம்பிக்கையைப் பொய்யாக்கி விட்டாய் என் நம்பிக்கையை நாசமாக்கிய உன்னை மறுபடியும் எப்படி நம்புவது போய் விட்டுவா! என்றார். இப்படி ஒரு நிலைமை வந்து விடக்கூடாது என்பதற்குத்தான் இந்தக் காலத்தில் பலர் ஒருவரிடம் ஒரு தடவைகடன் வாங்கி விட்டால் அடுத்த தடவை அவர் முகத்திலே விழிக்கிறதே இல்லை. □

தென்கச்சி கோ.சுவாமிநாதன்

---

17வது திருத்தசட்டமூலத்தால்

# தமிழ்க் கட்சிகளின் நிலைப்பாட்டில் மாற்றம்

(கொழும்பு)

நாட்டை மிகமோசமாக பாதித்துவரும் இனப்பிரச்சினைக்கு தீர்வு காணும் விடயம் 17 வது திருத்தச்சட்டத்தின் போது சிறுபான்மைத் தமிழ்க்கட்சிகளின் நிலைப்பாட்டில் மாற்றத்தை ஏற்படுத்தியுள்ளது. இந்த விடயத்தை அரசு தீவிரமாக கவனத்தில் கொள்ளவேண்டும்என்று பொது ஜன ஐக்கிய முன்னணியில் அங்கம் வகிக்கும் சமசமாசக்கட்சி விடுத்துள்ள அறிக்கையொன்றில் தெரிவித்துள்ளது;

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கையில்;

அரசியல் அமைப்பின் 17 வது திருத்தச் சட்டமூலத்தை ஒருஉபாயமாக பயன்படுத்திய ஐககிய தேசியக்கட்சி, இனங்களுக்கிடையிலான ஐக்கியத்தினை ஏற்படுத்துவதையும், அரசியல் தீர்வு ஏற்படுத்துவதையும் புறக்கணித்துவிட்டது

இனப்பிரச்சினைக்கு அரசு முக்கியத்துவம் கொடுக்காமல் 17 வது திருத்தத்திற்கு முக்கியத்துவம் அளித்தமை சிறுபான்மைக் கட்சிகளின் நிலையில் மாற்றத்தை ஏற்படுத்தியது.

எனவே இது விடயத்தில் அரசு தீவிரகவனம் செலுத்த வேண்டும் என்றும் லங்கா சமசமாசக் கட்சி சுட்டிக் காட்டியுள்ளது. [வ]

## ஆலயத்தில் திருட்டு

உரும்பிராய்வடக்கில்உள்ள பேச்சியம்பாள் ஆலயத்தில் உள்ள கதவு திருடர்களால் உடைக்கப்பட்டு அங்கிருந்த சில பெருட்கள்எடுத்துச் செல்லப்பட்டுள்ளன; (எ-215

---

புலிகளை ஒழித்துக்கட்ட வேண்டுமென

# அரசுக்கு அழுத்தம் கொடுப்பதற்கு ஜே.வி.பி.க்கு அருகதைகிடையாது

## மாநகர முதல்வர் ரவிராஜ் சீற்றம்

(யாழ்ப்பாணம்)

விடுதலைப் புலிகளை இராணுவ ரீதியாக ஒழித்துக்கட்ட வேண்டுமென ஜே.வி.பி, அரசுக்கு அடிக்கடி அழுததம் கொடுத்து வருகின்றது இருப்பினும், இதனைக் கூறுவதற்கு ஜே.வி.பி. க்கு எந்தவொரு அருகதையும் கிடையாது என்பதை நான் துணிந்து கூறுவேன்.

நேற்று முன்தினம் தமிழர் விடுதலைக் கூட்டணி யாழ். அலுவலகத்தில் இடம்பெற்ற தமது கட்சியின் நிலைப்பாடு தொடர்பான விளக்கக் கூட்டத்தில், யாழ்.மாநகர முதல்வர் என். ரவிராஜ் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்தும் உரை நிகழ்த்துகையில்;

அற்ப சலுகைகளுக்காக ஆயுதம் ஏந்திப் போராடிய ஜே.வி.பி. அவற்றினை அடைவதற்காக தனது சொந்த மக்களையே வகைதொகையின்றி ஈவிரக்கமற்ற வகையில் சுட்டுக்கொன்ற செயலை இலகுவில் யாரும் மறந்துவிட முடியாது.

இவ்வாறிருக்க, தமதுஇனத்தின் விடிவிற்காகவும சுதந்திரத்திற்காகவும் தம்முயிரை ஈய்ந்துவரும் தமிழீழ விடுதலைப்புலிகளை அழிக்க வேண்டுமென இவர்கள் கூறுவது எந்த வகையிலும் நியாயமாகாது என்றார்.

மேலும் கூறுகையில்; பொது ஜன ஐக்கிய முன்னணியாயினும். ஐக்கியதேசியக் கட்சியாயினும இரண்டும் இனவாதக் கட்சிகளே.

எந்த அரசு தமிழ் மக்களுக்கு உரிய அந்தஸ்தை வழங்கி, விடுதலைப் புலிகளுடன் பேசி இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்கிறதோ அதனை ஆதரிக்க நாம் எப்போதுமே பின்னிற்கப்போவதில்லை எனக் குறிப்பிட்டார். (உ-10,9)

## கடலை ஆழமாக்கும்கப்பல் பணியை ஆரம்பித்தது

(கொழும்பு)

இலங்கைத் துறைமுக அதிகார சபை புதிதாகக் கொள்வனவு செய்த கடலை ஆழமாக்கும்கப்பல் நேற்றுவைபவ ரீதியாக சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளது.

அமைச்சர் மகிந்தராஜபக்ச தலைமையில் இந் நிகழ்ச்சி நடைபெற்றது.

கடலைஆழமாக்கும் இக்கப்பல் 85 கோடி ரூபா செலவில் நெதர்லாந்து நாட்டிலிருந்து கொள்வனவுசெய்யப்பட்டது;

கன்சகாவா என பெயரிடப்பட்ட இக் கப்பல் கொழும்பு, திருகோணமலை, காலிஆகிய துறை முகங்களின் சமுததிர அடியில் உள்ள மணசேறு என்பவற்றைதோண்டிஎடுத்து துறைமுகத்தை ஆழப்படுத்தப்பயன்படுத்தப்படவுள்ளது

இதனால்பாரியகப்பல்களும் துறைமுக உட்பகுதியில் பிரவேசிக்க முடியும் என்று பொருட்களைசுலபமாகஏற்றி இறக்க வசதி ஏற்படும்என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (உ-2

## நவராத்திரி பூஜை

(யாழ்ப்பாணம்)

தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்கா தேவி தேவஸ்தான நவராத்திரி விழாப் பூசை 17ஆம் திகதி புதன்கிழமை மு. ப. 10.00 மணிக்கு ஆரம்பமாகி தினமும் பிற்பகல் பூஜைகள் 25ஆம் திகதி வியாழக்கிழமை வரை நடைபெறும்.

விஜயதசமி விழா 26 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 7.00 மணிப் பூஜையுடன் ஆரம்பமாகி நடைபெறும். (உ)

## ஆசிரிய தின நிகழ்வு

யாழ்ப்பாணம, வலிகாமம், தீவகம ஆகிய வலயப்பாடசாலைகள் இணைந்து நடத்தும் உலக ஆசிரியர் நாள் நிகழ்வுகள் நாளை வெள்ளிக்கிழமை பி.ப 3.30 மணிக்கு யாழ். இந்துமகளிர்கல்லூரியில் நடைபெறவுள்ளன.

இலங்கைத் தமிழர்ஆசிரியர் சங்கவேலணைக்கிளைததலைவர் பொ.அருணகிரிநாதன் தலைமையில் இடம்பெறும் இந் நிகழ்வில் பிரதம விருந்தினர்களாக யாழ்.வலய கல்விப் பணிப்பாளர் செ. மகாலிங்கம் வலிகாமம் வலய கல்விப் பணிப்பாளர் வீ.இராசையா, தீவக வலய கல்விப் பணிப்பாளர் ப. விக்னேஸ்வரன் ஆகியோரும் கலந்து கொள்ளவுள்ளனர்; (உ)

## கூடைப் பந்தாட்டம்

(வல்வெட்டித்துறை)

யாழ்.மாவட்ட கூடைப்பந்தாட்டச் சங்க ஆதரவில் யாழ். கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்று வரும் யாழ். மாவட்டப் பாடசாலைகளுக்கிடையிலான 17 வயதுக்குட்பட்ட மாணவர்களுக்கான கூடைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியில் நாளைய தினம்,

பி ப 4 மணிக்கு யாழ். உடுவில் மகளிர் கல்லூரி எதிர் வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலையும். பி; ப 4.45 மணிக்குயாழ். இந்துக்கல்லூரி எதிர் யாழ். மத்திய கல்லூரியும் மோதவுள்ளன;

(உ-217)

## சர்வதேச இந்துமத குருமார் ஒன்றியகொழும்பு கிளை அங்குரார்ப்பணம்

(யாழ்ப்பாணம்)

சர்வதேச இந்துமத குருமார் ஒன்றியத்தின் கொழும்புக் கிளையின் அங்குரார்ப்பணக் கூட்டம் அண்மையில் கொழும்பு முகத்துவாரம் சர்வார்த்தசித்திவிநாயகர் ஆலய மண்டபத்தில் ஆலய பிரதம குரு பிரம்மஸ்ரீ கு. சோமசுந்தரக குருக்கள தலைமையில் நடைபெற்றது.

இவ்வைபவத்திற்குஇந்துசமய கலாசார அமைச்சின் மேலதிக செயலாளர் ந. பரஞ்சோதி இந்துசமய ஆலோசகர் திருமதி யோகேந்திரா துரைச்சாமி ஆலயதர்மகர்த்தா சபை சார்பாக கலாநிதி ஏ.எஸ். குலசிங்கம் ஆகியோர் கலந்து கொண்டனர்;

அத்துடன்கண்டி, வவுனியா திருகோணமலை, மட்டக்களப்பு மாவட்டங்களுக்கான பிரதிநிதிகளும்தெரிவுசெய்யப்பட்டனர்.

சர்வதேச இந்துமத குரு பீடாதிபதி பிரம்ம ஸ்ரீ ஐ; மகேஸ்வர சிவாச்சாரியார் ஆசியுடன்மணி விழாக்காணும் சுன்னாகம் கதிரமலை சிவன் தேவஸ்தான பிரதம குரு பிரம்மஸ்ரீ நா. சோமாஸ்கந்தக் குருக்கள சர்வதேசஇந்துக் குருமார் ஒன்றியம் சார்பாகவும மஹா ஸ்ரீ வித்தியா சர்வதேச இந்து மதபீடமசார்பாகவும பொன்னாடை போர்த்தி மலர் மாலை அணிவித்துக் கௌரவிக்கப்பட்டார். (உ)

## வாதரவத்தை மக்கள் வெளியிடங்களுக்கு செல்வதில் சிரமம்

(நவக்கிரி)

வாதரவத்தையில் இருந்து புத்தூர் செல்லும் வீதி நீண்டகாலமாக திருத்தம செய்யப்படாது சீரற்று இருப்பதாக தெரிவிக்கபபடுகிறது.

அண்மையில பெய்த மழையினால் மேற்படி வீதி குணடும் குழியும் சேறும சகதியும் நிறைநததாய் காணப்படுவதால் இப்பகுதி மக்கள் தமது போக்குவரததுக்கு மிகுந்த சிரமப்பட்டு வருகின்றனா.

இதேவேளை, அடிப்படைவசதிகள் மிகக் குறைந்த வாதரவத்தைக் கிராமமக்கள் தமது தேவைகளை நிறைவுசெய்தற்பொருட்டுஅடிக்கடி புததூர்ப் பகுதிகளோ அன்றி அதனூடாக வேறிடத்திற்கோசெல்ல வேண்டிய தேவை இருப்பதும் குறிப்பிடத்தக்கது;

இது விடயத்தில், தமது நிலையினைப் புரிந்து சம்பந்தப்பட்ட தரப்புகள மேற்படி வீதியைப் புனரமைக்க முன்வரவேண்டும் எனவும் அப்பகுதி மக்கள் எதிர்பார்ப்பு வெளியிட்டுள்ளனர்,

(உ-233)

## சிந்தனைக்கு விருந்து

### எயிட்ஸ் கொணர்ந்தான்

நாடு நலம்பெருக நாடிஅயல் நாடுகளைத்
தேடித் தனம் பெறவே சென்றிடுவார் -- நாடுபல
சென்றுழைத்து மீண்டஇவன் செல்வப் பெண்டாட்டிக்(கு)
என்று கொணர்ந்தான் 'எயிட்ஸ்''

'பழையவன்'

### அமெரிக்காவின்

# பயங்கரவாத ஒழிப்பு நடவடிக்கை இந்தியாவிலும் தொடருமாம்

## அமெ. இராஜாங்க அமைச்சர் தெரிவிப்பு

(வாஷிங்டன்)

பயங்கரவாதத்திற்கு எதிராக உலகளாவிய ரீதியில் அமெரிக்கா மேற் கொள்ள இருக்கும் நடவடிக்கை ஓசாமா பின் லேடனுக்கு மட்டும் மட்டுப்படுத்தபபடாது என்றும், காஷ்மீரில் இந்தியா எதிர் கொள்ளும் தீவிரவாத வன் செயல்களையும் உள்ளடக்கும் என்றும்அமெரிக்க இராஜாங்க அமைச்சர்கொலின்பவல் தெரிவித்துள்ளார்.

இந்திய வெளியுறவு, மைச்சர் ஜஸ்வந்சிங்கிற்கும் அமெரிக்க இராஜாங்க அமைச்சர் கொலின்பவலிற்கும் இடையே நடைபெற்ற பேச்சுவார்த்தையின் பின், கொலின் பவல்இக் கருத்தை வெளியிட்டதுடன், கடந்த திங்கள் காஷ்மீர் மாநில சட்ட சபையின் மீது மேற்கொள்ளப்பட்ட தற்கொலைத் தாக்குதலில் உயிரிழந்தவர்க்கும் தமது அனுதாபத்தைத் தெரிவித்தார்.

இதேவேளைகாஷ்மீர் சட்ட சபை மீது தற்கொலைத்தாக்குதல் மேற்கொண்டவர்கள் ஓசாமாபின்லேடனின் அமைப்பைச் சேர்ந்தவர்கள் என்று இந்திய அதிகாரிகள் குற்றம் சாட்டி உள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (உ-2(

### உலக நாடுகளில்

## பொருளாதார தாக்கம் 2002 வரை நீடிக்கும

(வாஷிங்டன்)

அமெரிக்காவில் நடைபெற்ற பயங்கரவாத தாக்குதல்களின் மிக மோசமான தாக்கம் உலக நாடுகளின் பொருளாதாரத்தில் அடுத்த வருட நடுப்பகுதி வரை . பின்னடைவை ஏற்படுத்தும்என்று பொருளாதார ஒத்துழைப்பு மற்றும் அபிவிருத்திக்கான ஸ்தாபனம் அறிவித்துள்ளது.

இவற்றிற்கு தீர்வு காண வேண்டுமாயின் முதலீட்டாளரின் நம்பிக்கையை மீண்டும் பெறும் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்றும் கேள்வி அதிகரிக்க முயற்சி மேற்கொள்ளப்பட வேண்டும் எனவும் பொருளாதார முற்போக்கு கொள்கைகள் தீவிரமாக நடைமுறைப் படுததப்பட வேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பொருளாதார பின்னடைவின் தாக்கம் அபிவிருத்தி அடைந்த நாடுகளிலும் அபிவிருத்தி அடைந்து வரும்நாடுகளிலும் காணப்படும்எனவும் தெரிவிக்கப்படுகின்றது. (உ-2)

## ஐ. நா. ஆதரவு

(நியூயோர்க்)

பயங்கரவாதத்தை எதிர்த்துப் போராட ஒருங்கிணைந்த நடவடிக்கை தேவை என ஐ, நா, கூறி உள்ளது, இதனை உலக நாடுகள் ஏற்றுக்கொண்டுள்ளபோதும் பயங்கரவாதம் என்ற சொல்லுக்கு ஏற்ற விளக்கம் பற்றி உறுப்பு நாடுகளிடையேகருத்து வேற்றுமை நிலவுகின்றது. (உ-2)

### பெண்கள் கிரிக்கெட் போட்டி

## பங்கேற்கும் நாடுகளில் இலங்கையும் அடக்கம்

(டர்பன்)

2005 ஆம் ஆண்டு தென் ஆபிரிக்காவில் நடைபெற உள்ள உலகக்கிண்ண பெண்கள் கிரிக்கெட் சம்பியன் போட்டியில் கலந்து கொள்ள ஏற்கனவே ஆறு நாடுகள் தெரிவுசெய்யபபட்டுள்ளன.

2000 ஆம் ஆண்டு நியூசிலாந்தில் நடைபெற்ற பெண்கள் உலகக்கிண்ண கிரிக்கெட் போட்டியில் சிறப்பாக விளையாடிய இலங்கை, இந்தியா, தென் ஆபிரிக்கா, அவுஸ்திரேலியா, நியூசிலாந்து இங்கிலாந்து ஆகிய அணிகளே தெரிவு செய்யப்பட்டுள்ளன.

ஏனைய நாடுகள் தகுதி காண் அடிப்படையில் தெரிவு செய்யப்படும் எனவும், 2003 இல் மேற்படி தகுதிகாண் போட்டிகள நியூசிலாந்தில் நடைபெறும் எனவும், சர்வதேச பெண்கள் கிரிக்கெட் சம்மேளனத்தில் அங்கம் வகிக்கும் அனைத்து நாடுகளும்இத் தகுதிகாண் போட்டியில் சேர்த்துக் கொள்ளபபடும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (உ-2)

## உலக தரிசனம்

## எண்மர் கைது

(கம்பாலா)

பின்லேடனுடன் தொடர்புடையவர்கள் என்று சந்தேகிக்கப்படும் 8 பேரை உகண்டாப் பொலிஸார்கைது செய்துள்ளனர்.

போலிக்கடவுச்சீட்டுக்களையும் மற்றும்ஆவணங்களையும் வைத்திருந்ததன் பேரில் கைது செய்யப்பட்ட மேற்படி 8 பேரில் 7பாகிஸ்தானியரும், ஒருகம் போடியரும்உள்ளடங்குவர் என உகண்டாப் பொலிஸார்தெரிவித்துள்ளனர், (உ-7)

## அமெரிக்க தாக்குதலை எதிர்கொள்ள தயார்

### ஈராக் அதிபர் அறிவிப்பு

(வாஷிங்டன்)

கடந்த மாதம் அமெரிக்கா மீது நடத்தப்பட்ட தாக்குதல் தொடர்பாக எந்தவொரு எதிர்த்தாக்குதலையும் அதன் விளைவுகளையும் எதிர் கொள்ளத் தயாராக இருப்பதாக ஈராக்கின் பிரதிப் பிரதமர் ரெரிக் அஷிஸ் கூறியுள்ளார்.

அவர் மேலும் கூறுகையில், புதிய தொரு பலாத்காரம் எதையும் அமெரிக்கா மேற்கொள்ளாது எனத்தான் நம்புவதாகவும், ஆனால் எதிர் பாராத தாக்குதல் சந்தர்ப்பத்தை தாம் ஏற்றுக் கொள்ளத் தயார் என்றும் கூறியுள்ளார். (உ-7)

### ஆசியான் நாடுகள்

## அமெரிக்காவுக்கு ஒத்துழைத்தால் அநியாய இழப்பை சந்திக்க நேரிடும்

### மலேசியப் பிரதமர் எச்சரிக்கை

பின்லேடனையும் அவனின் சகாக்களையும் கண்டுபிடிக்கும் முயற்சியில் அமெரிக்காவுடன் எந்தவொரு ஆசியான் அமைப்பு நாடும் பங்குகொள்ளக் கூடாதென மலேசியப் பிரதமர் எச்சரித்துள்ளார்.

அமெரிக்காவின் இது போன்ற முழுஅளவிலான யுத்தம் பல அப்பாவி மக்களை அநியாயமாக இழக்கும் நிலையை ஏற்படுத்தும்,

எனவே அமெரிக்காவின் இராணுவ நடவடிக்கைகளில் ஆசியா பங்கேற்றால் பலபிரச்சினைகள் உருவாகும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

தென்கிழக்காசிய நாடுகளான கம்போடியோ, இந்தோனேஷியா லாவோஸ், மலேசியா, மியான்மார், பிலிப்பைன்ஸ், சிங்கப்பூர், தாய்லாந்து வியட்நாம், புரூணை போன்ற10 நாடுகள் ஆசியான் அமைப்பில் அங்கம் வகிக்கின்றன.

இதேவேளை ஆசியான் அமைப்பிலுள்ள சிங்கப்பூர் போன்ற ஒருசிலநாடுகள்தமது துறைமுகங்களை அமெரிக்க தாக்குதல்களுக்கு உதவும் வகையில் அமெரிக்காவுக்கு வழங்க பூரண ஒத்துழைப்பு வழங்கியுள்ளதும் குறிப்பிடத் தக்கது. (உ-7)

## தாக்குதலுக்கு நிறுத்தப்பட்ட அமெரிக்க கப்பல்கள் ஜப்பானிலிருந்து புறப்பாடு

(டோக்கியோ)

ஆப்கானிஸ்தான் மீது தாக்குதல் நடத்துவதற்காக ஜப்பானில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த அமெரிக்க கடற்படைக் கப்பல்கள் ஜப்பானை விட்டு புறப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த மாதம் இடம்பெற்ற அமெரிக்கா மீதானதாக்குதல்களுக்கான சூத்திரதாரி பின்லேடனே என்று அமெரிக்கா திட்டமாக கூறி பின்லேடன் தங்கி வாழும் ஆப்கான் மீது தாக்குதல் நடத்த ஜப்பானின் உதவியுடன் அதன் துறைமுகங்களில் போர்க் கப்பல்களை நிறுத்தி வைத்திருந்தது.

அக்கப்பல்களில் விமானத்தளத்தைக் கொண்ட 'கிற்றிகோட்' என்ற கப்பல் டோக்கியோவின் மிக அண்மையில் உள்ள துறைமுகத்திலிருந்து புறப்பட்ட மறு நாள் மேலும் 5 அமெரிக்க கடற்படைக் கப்பல்கள் ஜப்பானை விட்டு புறப்பட்டுள்ளன.

தாக்குதல் கப்பலான எஸ். எக்ஸ் இறங்குதுறைக் கப்பல்களான ஜேர்மன் "ரோன் போட்த கன்றி" கண்ணி வெடிக் கப்பலான காடியன் பேடியற்ஆகியனவும் மேற்படி கப்பல்களில் அடங்கும்.

ஆனால் இக்கப்பல்கள் ஜப்பானை விட்டு வெளியேறி எங்கு செல்கின்றன என அமெரிக்கா இது வரை செய்திகள் எதுவும் வெளியிடவில்லை இருந்த போதும் அவை மீண்டும் அமெரிக்கா நோக்கியே புறப்பட்டிருக்கலாம் என ஜப்பானின் துறைமுக அதிகாரிகள் தெரிவிக்கின்றனர். (எ-7)

### சவு. அரேபிய அரசு

## பின்லேடன் குடும்பத்தை பாதுகாக்க திடசங்கற்பம்

(கட்டார்)

சவுதி அரேபியாவில் உள்ள ஒஸாமா பின்லேடனின் குடும்பத்தினை சவுதி அரேபியாவின் பிரஜைகள் என்ற ரீதியில் பாதுகாக்கப் போவதாக சவுதி அரேபிய உள்துறை அமைச்சர் உறுதிஅளித்துள்ளார்.

பின்லேடனின் செயல்களுக்கு அவனின் குடும்பத்தினர் பாத்திர வாளிகளாக இருக்கமுடியாது.

எனவே சவுதி அரேபியாவிலும் வேறு வெளிநாடுகளிலும் அவர்களைப் பாதுகாப்பது எமதுபொறுப்பாகும் என சவுதி அரேபியாவின் உள்துறை அமைச்சர் கூறியுள்ளார்.

பத்திரிகையாளர்களுக்கு அளித்த பேட்டி ஒன்றிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். (உ-7)

### ஆட்ட நிர்ணய ஊழல்

## பாக். கிரிக்கெட் வீரர்கள் விசாரணைக்கு அழைப்பு

(இஸ்லாமபாத்)

1999 இல் இங்கிலாந்தில் நடைபெற்ற உலகக் கிண்ண கிரிக்கெட் போட்டியில் பாகிஸ்தான் அணி விளையாடிய இரு போட்டிகள் ஏற்கனவே நிர்ணயிக்கப்பட்டவை என்று கூறப்படும் குற்றச்சாட்டு தொடர்பாக ஆணைக்குழுவின் விசாரணைகளுக்கு வரும் 13ஆம் திகதி தோற்றுமாறு முன்னாள் விளையாட்டு வீரர்கள் பலர் அழைக்கப்பட்டுள்ளனர்.

முன்னாள் வீரர்களான மஜித் கான், ஜாவிட் மரியாண்டாட், காலித்முஹமூட், டாக்டர் சபர் அல்தார், இப்திகார் ஆகியோர் விசாரணைக்கு அழைக்கப்பட்டுள்ளனர்.

பங்களாதேஷ், இந்தியா ஆகியவற்றுடனான போட்டிகளிலேயே இம்முறைகேடுகள் இடம்பெற்றதாகக்கூறப்பட்டதைத் தொடர்ந்து பாகிஸ்தான் அரசு ஆணைக்குழுவை அமைத்து விசாரணை நடத்தி வருகின்றது. ஏற்கனவே லாகூர் நீதிமன்றில் இரு தடவை விசாரணைகள் நடைபெற்றமை குறிப்பிடத் தக்கது. (உ-2)

### அமெரிக்காவுடன்

# போரிடுவதை விரும்பவில்லை பின்லேடனை ஒப்படைக்க தயார்

### தலிபான்கள் அதிரடி அறிவிப்பு

(காபூல்)

அமெரிக்காவுடன் யுத்தம் செய்ய தாம் விரும்பவில்லை என்றும் இதுபற்றி அமெரிக்காவுடன் நேரில் பேச விரும்புவதாகவும் ஆப்கானிஸ்தானின் தலிபான் அமைப்பினர் தெரிவித்துள்ளனர்.

பாகிஸ்தானுக்கான தலிபான் தூதுவர் முல்லா, 'அப்துல் சலாம்சலீம்' தொலைக்காட்சி ஒன்றுக்கு பேட்டி அளிக்கையிலேயே இவ்வாறு கூறியுள்ளார்.

இதேவேளை, கடந்த மாதம் 11ஆம்திகதி அமெரிக்க நியூயோர்க் மற்றும் வாஷிங்டன் நகரில் இடம்பெற்ற தாக்குதல்களுக்கு பின்லேடனே காரணம் என்பதை ஆதாரபூர்வமாக நிரூபித்தால் அவரை ஒப்படைக்க தாம் தயார்என்று கூறி தலிபான் தூதுவர் மேற்படி தாக்குதல் இஸ்லாம் மதத்தினருக்கு உடன்பாடானதல்ல என்றும் தெரிவித்தார். (உ-7)

## குஜராத் மாநில முதல்வர் பதவி விலகினார்

(புதுடில்லி)

குஜராத் மாநில முதலமைச்சர் தேசுபாய் பட்டேல் தனது பதவியை இராஜினாமா செய்துள்ளார்.

தனது பதவி விலகல் கடிதத்தை பாரதிய ஜனதாக் கட்சித் தலைவர் ஜனா கிருஷ்ணமூர்த்தியிடம் சமர்ப்பித்து விட்டதாகவும் கட்சித் தலைமையின் வேண்டுகோளின் பேரிலேயே இந் நடவடிக்கையை தான் மேற்கொண்டதாக தெரிவித்தார். (உ-2)

கேடும் பெருக்கமும் இல்லல்ல நெஞ்சத்துக்
கோடாமை சான்றோர்க்கணி

குறள்

# வலம்புரி

## திருடர்களின் ஆதிக்கம்!

கந்தரோடைப் பகுதியில் திருடர்கள் மீது நடவடிக்கை எடுத்த கிராம உத்தியோகத்தர் ஒருவரை அத்திருடர்கள் கண்டபடி தாக்கியுள்ளனர். தம்மீது நடவடிக்கை எடுத்த கிராம உத்தியோகத்தரை நேரில் சென்று தாக்குமளவிற்கு திருடர்களின் கை ஓங்கிவிட்டது.

யாழ். மாவட்டம் முழுவதும் பொலிசாரும், இராணுவத்தினரும் மூலைக்கு மூலை குந்தியிருக்கும் போது ஊரடங்கு வேளையில் திருடர் கோஷ்டி வீடு புகுந்து பெறுமதியான பொருட்களை களவாடிச் செல்கிறதெனில் அதன் மர்மம் என்னவென்பது ஆராய்வுக்குரியது.

பாதுகாப்புப் படையினர் சந்திக்குச் சந்தி காவலில் இருக்க இத்தகைய திருட்டுக்கள் இடம் பெறுவதைப் பார்க்கும் போது தமிழர்களின் தேட்டங்களை அழித்து அவர்களின் நிம்மதியைக் குலைக்க ஒரு சதி நடப்பது போல் தெரிகிறது.

இளைஞர் குழுக்கள் - பொது அமைப்புக்கள் விழிப்புக் குழுக்களை அமைத்து திருட்டுக்களை ஒழிக்க நடவடிக்கை எடுத்தாலும் அதற்குப் படைத்தரப்பு ஒத்துழைப்பு வழங்குவதாக இல்லை.

இந்நிலையில் திருடர்களின் ஆதிக்கம் மேலெழுந்துள்ளது. திருட்டுப் பற்றி பொலிசாரிடம் முறையீடு செய்து திருடனைக் காட்டிக் கொடுத்தால் ஏதோ சட்டம் சம்பிரதாயம் என்பதற்காக பொலிஸ் நிலையம் வரை அழைத்துச் சென்று விட்டு, விடுவிப்பதும் அவ்வாறு விடுவிக்கப்பட்ட திருடன் காட்டிக் கொடுத்தவர்களைத் தாக்குவதும் - தாக்க முற்படுவதும் அண்மைக் காலமாக நடக்கும் சாதரண நிகழ்வாகும்.

அந்த வரிசையில் ஒரு கிராம உத்தியோகத்தர் மீது திருடர் குழு தமது கை வரிசையைக் காட்டியுள்ளது. இது விடயத்தில் பொலிசார் உரிய-தகுந்த நடவடிக்கை எடுக்கத் தவறினால் யாழ் மாவட்டத்திலுள்ள கிராம உத்தியோகத்தர்கள் தமது கடமையை சரியான முறையில் மேற்கொள்ள முடியாது போகுமென்பதுடன் திருட்டுப் போன்ற சம்பவங்களை ஒழிப்பதிலும் கரிசனை காட்டமாட்டார்கள் என்பதை உணர்ந்து கொள்ளவேண்டும். அத்துடன் திருட்டு திருட்டு என ஓலமிடுவதை விடுத்து திருடர்களுக்கெதிராக மக்கள் கிளர்ந்தெழுவது அவசியமாகும்.

---

மறைந்தார் மாண்பு

# சிந்தனை முத்துக்களைச் செந்தமிழிற் தந்த பொ. கைலாசபதி ஒரு மௌனத் தவமுனிவர்

தமிழிலே தோன்றிய பழம் பெரும் இலக்கண நூல் தொல்காப்பியம் சங்கச் சான்றோர்களான புலவர்கள் இயற்றிய பாக்களுக்கும் உலகவழக்கிற்கும் இலக்கணம் அமைத்துத் தந்த பெருமை தொல்காப்பியருக்கு உண்டு.

'இலக்கியம் என்பது வாழ்க்கையின் கண்ணாடி என்பர்' ஆனால் வாழ்க்கை பற்றிய நோக்கில் இருவேறு அணுகு முறைகள் உள்ளன. 'வையத்து வாழ்வாங்கு வாழ்வதே' உண்மை வாழ்க்கை என அதனை அணுகுவது ஒரு முறை. 'இந்தச் சரீரத்தை இறைவன் தந்தது தன்னை வணங்கி முத்தியின்பம் பெறுதற் பொருட்டே' என்று கொண்டு எதிலும் இறைதத்துவத்தினைக் கண்டு, அதற்கு இசைவாக வாழ்க்கையை அணுகுவது மற்றொருமுறை, இவ்விரண்டு முறைகளும் அவரவரின் உள்ளப் பக்குவத்திற்கேற்பவே அமைவன.

### ஆன்மீகத்துறை

இலக்கிய, இலக்கணங்களை மானிட வாழ்வோடு இணைத்து நோக்குவது மிகத் தாழ்வானதென்றும்' அவற்றை இறை - ஆன்ம தத்துவத்தோடு இணைத்து நோக்குவதே மிக உயர்ந்ததென்றும் அதுவே உண்மையானது; கைக்கொள்ளத் தக்கதென்றும் கொள்வோர் தமிழில் மட்டுமன்றிப் பிற மொழிகளிலும் உளர் என்பது அறிஞர் சிலரால் எடுத்துக் காட்டப்பட்டுள்ளது. இவர்கள் எண்ணிக்கையிலே மிகக் குறைவானவரே எனினும் ஆன்மீகத்துறையிலே தம்மை முற்றாக ஈடுபடுத்தி, ஆன்ம சாதனையிலே மேலோங்கி, மிகுந்த பரிபக்குவராய் விளங்குவதும் தருமம் என்ற கூரிய வாளிலே சஞ்சரிப்பதும், அந்தத் தரும வழியிலே தாம் கற்றும்- கேட்டும், அனுபவ வாயிலாய் உணர்ந்து கொண்டோரை அவரவர் தகுதிக்கேற்ப வரிசை செய்வதும் இவர்களின் இயல்புகளாகும். இவர்களைச் சாதாரணரான எம்போலியரால் விளங்கிக் கொள்வது எவ்வளவு கடினமோ, அதிலும் கடினம் அவர்களின் வழிநின்று ஒழுகுவது, இத்தகையோர்.

'எத் தொழிலைச்செய்தாலும் ஏதவத்தைப்பட்டாலும்
முத்தர் மனமிருக்கும் மோனத்தே'

எனப் பெரும்பாலும் மௌனத்திலேயே தம் பொழுதைக்கழிப்பர்; வாயாற் பேசாதபோதும் அவர்களுடைய உறங்கா மனம் எந்நேரமும் ஆன்மீக இறை உலகிலேயே சஞ்சரித்துச் சிந்தனை முத்துக்களைப்பிரசவித்த வண்ணமே இருக்கும் இவர்கள் மௌன தவமுனிவர்கள்;

### பொ. கைலாசபதி

இவ்வாறான மௌன தவ முனிவரே, திருநெல்வேலி சைவாசிரிய கலாசாலையின் முன்னாள் உப அதிபர் பொ. கைலாசபதி, இவரின் அணுக்கர்களாயிருந்த பக்குவர்கள் சிலருக்கு, இவர் அவ்வப்போது தம் ஆழ்நிலைக் கருத்துக்களை எடுத்துரைத்து வந்துள்ளார். அவை அவர்களால்- சிறப்பாகப் பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளையால்- குறிப்பெடுக்கப்பட்டும் பல அப்பியாசப் புத்தகங்களிலே பேணப்பட்டு வந்து, அண்மையில் அக் கருத்துக்களின் விரிவான பாஷியமாக- பேருரையாக- 'கைலாசபதி ஸ்மிருதி' வெளியாகியுள்ளது; இப்பேருரையை வழங்கியவர் இலக்கிய கலாநிதி பண்டிதமணி மு; கந்தையா ஆவார்;

பொ. கைலாசபதி சிந்தனைகளை ஆராய்ந்து, யாழ்ப்பாணம் பல்கலைக் கழகத்திற்கு 'எம்...பில்' தேர்விற்கென ஆய்வேடுஒன்றும் சமர்ப்பிக்கப்பட்டது: இது, இம்மா பெரும் ஞானியின் கருத்துக்கள் அறிவுசார் மேல்மட்டத்தில் சிறிது சிறிதாகச் சுவறி வருகின்றன என்பதை எடுத்துக் காட்டுகின்றது;

### சீரணிக்க முடியாத சில கருத்துக்கள்

நாம் முதலிற் குறித்தது போலவும் எம் போலியரால் விளங்கிக் கொள்ளவோ, சீரணிக்கவோ கடினமான சில கருத்துக்களை இங்கு முன் வைக்கின்றேன்.

### சொக்கன்

1) மொழிப்பற்று மூட நம்பிக்கையில் தோன்றி வெறும் அபிமானம் என்ற நீரில் வளர்ந்து மொழிவெறியாகிய நச்சுக்கனி தருவதை அவதானித்த கைலாசபதி அவர்கள் தம்முடன் பழகிய ஒரு சிலருக்கு அதன் தாக்கங்கள் பற்றிக் கூறியதாகவும் அறிகின்றோம். (கைலாசபதியின் தமிழ் பற்றிய விசேடமாகத் தொல்காப்பியம் பற்றிய கருத்துக்கள் ...... ஆய்வேடு. இயல் 4)

2) கைலாசபதி தமிழ் மொழியை ஆன்மீக அடிப்படையில் பதினெட்டு வகையாக வகைப்படுத்துகிறார். (கை- பக் 145)

3) அவர் சமயம்வேறு, தமிழ் வேறு என்று பிரித்துப் பார்ப்பதில்லை இரண்டையும் ஒன்றிணைந்த பார்வையில் நோக்கினார். (கை; பக் 151)

4) கைலாசபதி அவர்கள் வேதம்போலவே வேதாங்கமாகிய வியாகரணமும், தமிழ் இலக்கணமாகிய தொல்காப்பியமும் ஆன்மீக அடிப்படையில் அமைந்தவை. அவை உயர்ந்த தனிச்சிறப்புடையன உயர்ந்த தனிச்சிறப்புப் பொருள் நிலை என்பதைத் தெளிவாகக் கூறியுள்ளார்; (கை. பக். 152)

மௌனதவ முனிவரின் மேற் குறித்த கருத்துக்கள் சிந்தனைக்கு மருந்துகளாய்க் கொள்ளத் தக்கன என்பதற்கு ஐயமில்லை. ஆனால்' சிந்தனைக்கு விருந்து' தேடும் தமிழுலகு இவற்றுக்கு எந்த அளவு இடமளிக்கும் என்பது சிந்திக்கத் தக்கதே. இலர் பலராகிய காரணம் நோற்பார்: சிலர் பலர் நோலாதவர் திருக்குறள்;

இந்தியாவில்நிலவும் பாஷைகள் பதினெட்டு என்றுபாரதியார்பாடினார்; மொழியியலார் இந்தியப் பிரதான மொழிகள் 14 என்பர்; பண்டிதராவார் பதினெட்டுப் பாடைகளையும் கண்டவர் என்ற திருமூலர் கூற்றை அடிப்படையாக கொண்டு. பொ. கைலாசபதி பதினெட்டு வகை தமிழ் பதினெட்டுப்பாடைகள்) என விதித்து விளக்கம் தருகின்றார் போலும்.

---

## சைக்கிள் மாயம்

(யாழ்ப்பாணம்)

மாசியப்பிட்டி பொதுச் சந்தையின் சைக்கிள் பாதுகாப்பு நிலையத்தில் நிறுத்தப் பட்டிருந்த பெண்களுக்கான ஒரு சைக்கிள் அண்மையில் காணாமல்போயுள்ளது.

இது தொடர்பாக மானிப்பாய் பொலிஸில்முறைப்பாடு செய்யப்பட்டுளளது.

(உ-232)

## பொதுக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

அஞ்சல்தொலைத்தொடர்பு சேவையாளர் சங்க யாழ்ப்பாணக்கிளையின் 31வதுஆண்டுப் பொதுக் கூட்டம் எதிர்வரும் 7ஆம் திகதிஞாயிற்றுக்கிழமை மு;ப 10மணிக்கு கிளைச் சங்கத்தலைவர் ஆ.சுந்தரலிங்கம் தலைமையில் அஞ்சல் அலுவலகத்தில் நடைபெறவுள்ளது;

(உ-106)

## சாயி அருளமுதம்



மிகவும் அதிக அளவிலான மூலாதாரங்கள் மனிதனிடமிருக்கின்றன. தனக்கும் தன்னைத் தாங்கி நிற்கும் சமூகத்திற்கும் தனது கடமைகளை நிறைவேற்றுவதற்காக அவற்றை உபயோகிக்காமலிருக்கும் போதுஅவன் ஏளனத்துக்கு இலக்காகிறான். நீங்கள் புகையிரத நிலைய மேடையில் உடன்வர வேண்டிய ரயிலுக்காகக் காத்துநிற்கும் வேளையில் ரயில் ஐந்து மணி நேரம் தாமதமாகி வருமென நீங்கள் அறியும் போது என்ன செய்வீர்கள்? வாய்க்கு வந்தபடி ரயிலைப் பேசித் தீர்ப்பீர்களல்லவா? வெறும் ரயில் பெட்டிகளே இவ்வாறான நிந்தனைக்குள்ளாகும் போது, மனிதனென்ற வகையில் உங்களிடம் மற்றவர்கள் கொண்டுள்ள எதிர்பார்ப்புகளுக் கேற்ப உங்கள் கடமைகளை நிறைவேற்றத் தவறுவதனால் ஏற்படும் ஏமாற்றத்தின் காரணமாக இன்னும் எவ்வளவு கூடிய நிந்தனைக்கு நீங்கள் அருகதையாகிறீர்கள் கடமையின் தேவைக்கேற்ப உங்கள் திறமைகளையும் ,கல்வியையும் உறுதியாகவும், பயனளிக்கத் தக்க வகையிலும் உபயோகியுங்கள்;

நன்றி
நாளாந்த நற்சிந்தனை

---

## தென்மராட்சிப் பகுதி முன்பள்ளி ஆசிரியர்களுக்கு விரைவில் கொடுப்பனவு

(யாழ்ப்பாணம்)

தென்மராட்சி மற்றும் பளைப் பகுதிகளைச் சேர்ந்த முன்பள்ளி ஆசிரியர்களுக்கான கொடுப்பனவுகள் விரைவில் வழங்கப்படும்.

மேற்படி பகுதிகளைச் சேர்ந்த முன்பள்ளி ஆசிரியர்களுக்கான கூட்டம் கடந்த செவ்வாயன்று இடம்பெற்ற போது அதில் கலந்து கொண்ட உள்ளூராட்சி சங்க அபிவிருத்தி உத்தியோகத்தர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

'நான்' மற்றும் யுனிசெவ் அமைப்புகளால் வழங்கப் படும் 1000 ரூபா இப் பகுதி முன்பள்ளி ஆசிரியர்கள் பலருக்கு இது வரை வழங்கப்படவில்லையெனவும் இக் கூட்டத்தில் சுட்டிக் காட்டப்பட்டது.

இதே வேளை, இப்பகுதிகளில் இடம்பெற்ற அசாதாரண சூழ் நிலைகளால் முன்பள்ளிச் சிறார்களின் விளையாட்டு மற்றும் கலை நிகழ்வுகளை நடாத்த முடியாதிருப்பது குறித்து இக் கூட்டத்தில் கவலை தெரிவிக்கப்பட்டது;

110 முன்பள்ளிகளைச் சேர்ந்த நூற்றுக்குமேற்பட்ட ஆசிரியர்கள் இக் கூட்டத்தில் பங்கு பற்றியமை குறிப்பிடத்தக்கது;

(உ-124)

## சமாதானத்தை நிலைபெறச் செய்ய அனைவரும் பாடுபட வேண்டும்

(யாழ்ப்பாணம்)

மாணவர்கள் மத்தியில் சமாதானம் குறித்த நம்பிக்கையை ஊட்டுவதும் அமைதி வாழ்வுக்கு உகந்த சூழலைத் தோற்றுவிக்கப் பாடுபடுவதும் ஆசிரியர்களாகிய உங்களது கடமையாகும் என்று அமைச்சர் கே.என். டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்;

தகுதிகாண் ஆசிரியர் நியமனம் பெற்றுள்ள பட்டதாரிகள் மத்தியில் கருத்து தெரிவித்த அமைச்சர் மேலும் குறிப்பிடுகையில்;

'எதிர்காலம் குறித்து நம்பிக்கையுடன் முயற்சி மேற்கொள்வதே மனித இயல்பு. அது போல சமாதானம் குறித்து நம்பிக்கையுடன் முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும்: அவ்வாறு சமாதானம் நிலைபெறச் செய்வதில் ஒவ்வொருவரும் பங்களிப்புகளைச் செய்ய முன்வர வேண்டும் எனக் கேட்டுக் கொண்டார்;

(உ)

# இந்திய வெளியுறவு இணை அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமருடன் சந்திப்பு

(கொழும்பு)

இந்திய மத்திய வெளியுறவுத்துறை இணை அமைச்சர் ஓமர் அப்துல்லா நேற்று வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமரை கொழும்பில் சந்தித்து பேச்சு நடத்தியுள்ளார்.

அமெரிக்க நகரங்கள் மீது நிகழ்த்தப்பட்ட தாக்குதலையடுத்து எழுந்துள்ள அச்சநிலை காரணமாக, தென்னாசிய நாடுகள் தமக்கிடையே எடுக்க வேண்டிய கூட்டு நடவடிக்கைகள் குறித்து ஆராய அமைச்சர் அப்துல்லா நேற்று மாலைதீவுக்கு பயணமானார்:

மாலைதீவுக்கு பயணமாகும் வழியில் விமானம் கட்டுநாயக்காவில் தரித்து நின்ற போதேஅமைச்சர் அப்துல்லா அமைச்சர் கதிர்காமரை சந்தித்து பேசியுள்ளார்:

இச்சந்திப்பின் போது இலங்கையின் தற்போதைய அரசியல் நிலைவரம்குறித்து இரு தலைவர்களும்பேசிக் கொண்டதாகசெய்திகள்தெரிவிக்கின்றன: (இ)

---

## வவுனியா

வீடுதிரும்பவில்லை என்றும் நேற்றுக்காலை பண்டாரிக்குளத்தில் சடலமாக மீட்கப்பட்டதாகவும் இவரதுதந்தை நீதிவானிடம் தெரிவித்துள்ளார்.

இவரது சடலம் பிரேத பரிசோதனைக்காகத் தற்போது வவுனியா வைத்திய சாலையில் வைக்கப்பட்டுள்ளது; (வ)

---

## குமரப்பா

கொழும்புக்கு அழைத்துச் செல்லப்பட இருந்தபோது 12 பேரும் சயனைட் அருந்தித்தற்கொலை செய்து கொண்டனர்.

இலங்கை - இந்திய ஒப்பந்தம் ஏற்பட்டபின் இடம் பெற்ற இச்சம்பவத்தை அடுத்து இந்திய அமைதிப் படைக்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையில் யுத்தம் ஆரம்பமானது இங்கு குறிப்பிடத்தக்கது.

புலிகளின் சட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் இந்த நினைவு தின நிகழ்வை அனுஷ்டிக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது. ம)

---

## யாழ். போதனாவைத்திய....

ளும் மற்றும்பற் பகுதிகளுமே நேற்று எடுக்கப்பட்டன.

புதைகுழி தோண்டும் பணிக்காக நேற்று கொழும்பிலிருந்து காலி சட்டவைத்திய அதிகாரி றுவன்புர, பதில் சட்ட வைத்தியஅதிகாரி எஸ். பெர்னாண்டோ, மற்றும் தயானந்தசமரவீர ஆகியோர் அடங்கிய குழு யாழ்ப்பாணம் வந்திருந்தது.

யாழ் மாவட்ட நீதிமன்ற நீதிபதி இ. த. விக்னராஜா முன்னிலையில் இடம் பெற்ற இப்பணியில் யாழ். பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி குடாகிஹெட்டி, மற்றும் காங்கேசன்துறை குற்றத் தடுப்புப் பிரிவு பொறுப்பதிகாரி பிறேம் ரத்ன பண்நாயக்க ஆகியோர் ஈடுபட்டனர்.

மீட்கப்பட்ட எலும்புக்கூடுகளில் ஒன்று ஆணின் உடையது எனவும், மற்றையது பெண்ணினுடையது எனவும் இவை ஐந்து வருடத்திற்குட்பட்டவை எனவும் தெரிவிக்கப்பட்டது.

இவ் மனித எச்சங்கள் பற்றிய உறுதியான முடிவு பரிசோதனைகள் மூலம் வெளியிடமுடியும் என சட்ட வைத்திய அதிகாரிகள் குழு தெரிவித்தது.

புதைகுழி மூன்று நாட்கள் தோண்டுவதென எதிர்பார்த்த போதும், நேற்றைய தினம் எலும்புக்கூடுகள் எவையும் மீட்கப்படாததால், தொடர்ந்து புதைகுழியை தோண்டுவது தொடர்பாக இன்று காலை நீதிமன்றில் முடிவெடுக்கப்படுமென நீதிபதி இ.த.விக்னராஜா தெரிவித்துள்ளார்.

(இ-09-10-104)

---

## வெளிநாட்டு

ளார்.

இதுசம்பந்தமாக இராணுவப் பேச்சாளர் சரத்கருணரத்தினா தகவல்தருகையில் பத்திரிகையாளர் றிம்எலியர் மட்டக்களப்பில் இருந்துஅனுமதி கேட்டதாகவும் நிலைமைகளை அனுசரித்து அனுமதி வழங்கப்பட்டதாகவும் தெரிவித்துள்ளார். (வ)

---

# ஷெல் வீழ்ந்துவெடித்ததில் மீனவர் துடிதுடித்துப் பலி

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு ஆலங்குளப் பகுதியில் மீன்பிடித்துக் கொண்டிருந்த இளம்மீனவர் ஒருவர் ஷெல்வீச்சுக்கு இலக்காகி ஸ்தலத்திலேயே துடிதுடித்து பலியானார்.

நேற்றுநண்பகல் இடம் பெற்றஇச்சம்பவத்தில் நாகமணி நாகலிங்கம் (வயது30) என்பவரே பலியானவராவர்

சம்பவம் பற்றித் தெரியவருவதாவது பிரஸ்தாப மீனவர் குளத்தில் மீன்பிடித்துக் கொண்டிருந்த சமயம் வாகனேரி இராணுவ முகாமிலிருந்து ஏவப்பட்டஷெல் அவருக்கு அருகில் வீழ்ந்துவெடித்ததாக மட்டக்களப்புச் செய்திகள் தெரிவிக்கின்றன. (இ)

---

# இலங்கை வங்கி யாழ். மேற்தரக் கிளையில் சனிக்கிழமைகளிலும் பணி

(யாழ்ப்பாணம்)

இலங்கை வங்கியின் யாழ். மேற்தரக்கிளை சனிக்கிழமைகளிலும் திறக்கப்பட்டு பணிகள் இடம்பெறும் என இலங்கை வங்கி மேற்தரக் கிளையின் சிரேஷ்ட முகாமையாளர் அறிவித்துள்ளார்:

எதிர்வரும் சனிக்கிழமை காலை 9.00 மணிக்கு இலங்கை வங்கியின்வடபிராந்திய உதவிப் பொது முகாமையாளர் திருமதிக.துரைராஜா இப்பணியை வைபவரீதியாக ஆரம்பித்து வைக்கவுள்ளார்.

வெளிநாட்டு உண்டியல் மாற்றல், வெளிநாட்டுத் தாள், நாணயங்கள்மாற்றல், நகை அடகு வைத்தல்உட்பட வழமையான வங்கிச் சேவைகள் காலை 9.00மணி முதல் பி. ப 1. 30மணி வரை இடம் பெறும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (உ)

---

# அனுமதி பெறும் மாணவர்களின் விபரம் வெளிப்படுத்த வேண்டும்

(கொழும்பு)

2002ம் ஆண்டு பாடசாலைகளில் தரம் ஒன்றுக்கு மாணவர்களை அனுமதிக்கும்போது அனுமதிக்கான தெரிவுகள் முடிவடைந்த பின் வகுப்பில் சேர்த்துக் கொள்ளப்படவுள்ள மாணவர்களின் பெயர் விபரங்கள் பாடசாலை விளம்பரப்பலகையில் போடப்படுவதுடன் சேர்த்துக் கொள்ளப்படவுள்ள மாணவர்களின் பெயர் விபரங்களை பத்திரிகைகளிலும்விளம்பரம் செய்ய வேண்டும்.

இவ்வாறு கல்வி,உயர்கல்வி அமைச்சர் சரத்அமுனுகம பாடசாலை அதிபர்களுக்கு அறிவுறுத்தல் வழங்கியுள்ளார்.

முதலாம் வகுப்பு மாணவர்களை பாடசாலைகளில் அனுமதிக்கும் போது அன்பளிப்புப் பணம் பெறுவது போன்ற பல ஒழுங்கீனங்கள் இடம் பெறுவதைத் தவிர்ப்பதற்காகவே இந்நடைமுறை அறிமுகப்படுத்தப்படவுள்ளதாக அமுனுகம தெரிவித்துள்ளார்.

இப்புதிய நடைமுறை தேசியப் பாடசாலைகளில் முதலாம் வகுப்பில் மாணவர்களைச் சேர்க்கும் போது உடனடியாக நடைமுறைப்படுத்தப்படும் என்றும் கல்வி அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார்: (வ)

---

## ரவூப்

மறைவுக்குப்பின் பொதுஜன ஐக்கிய முன்னணியே தனது தரப்பில் ஒருவரை எம்.பி.யாக நியமிக்கவேண்டும்

முன்னாள் அமைச்சர் ரவூப் ஹக்கீமின் அணியில் உள்ள ஏனைய எம்பிக்களின் ஆதரவைப் பெறுவதற்கு மறைமுகமாக இடம்பெற்ற பேச்சுவார்த்தையின் அடிப்படையில் ரவூப் ஹக்கீமின் அணியைச் சேர்ந்த ஒருவரை பொதுஜன ஐக்கிய முன்னணியின் தேசிய பட்டியல் எம்.பியாக்க ஜனாதிபதி சந்திரிகா சம்மதம் தெரிவித்திருப்பதாக தெரியவருகிறது.

ஜனாதிபதி சந்திரிகாவின் இந்த முடிவுக்கு அமைச்சர் பேரியல் அஷ்ரப்பும் ஆதரவு வழங்கியிருப்பதாகவும், இந்த நியமனத்தின் மூலம் பொதுஜன ஐக்கிய முன்னணியின் பெரும்பான்மை பலம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாக அரசியல் அவதானிகள் கருத்து வெளியிட்டுள்ளனர்: (வ)

---

## பிரதிநிதியை

தமது பிரதிநிதி ஒருவரைத் தெரிவு செய்து அரசுக்கு அறி அறிவிக்க வேண்டும்.

இந்நிலையில் ரெலோ அமைப்பினர் தமதுதரப்பில் சிறீ விக்னேஸ்வரன், கரிகாலன் ஆகியோரையும் தமிழ் காங்கிரஸ் ரி.சுந்தரலிங்கம் சட்டக்கல்லூரி விரிவுரையாளர்வி.ரி.தமிழ்மாறன் ஆகியோரையும் கூட்டணியினர் சி.விவேகானந்தன், எஸ். விக்கினராசா, பொன்னாவிக்கினராசா ஆகியோரையும் தத்தம் பிரதிநிதிகளாக முன்நிறுத்தியுள்ளனர்.

இவர்களில் ஒருவரையே தெரிவு செய்ய வேண்டியிருப்பதால் மீண்டும் இன்று கூடி ஒரு முடிவுக்கு வரவுள்ளதாக தமிழ்க்கட்சி வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இதேவேளை முஸ்லிம் மக்களின் சார்பில் உலமாசபை டாக்டர் சகாப்தீன், யாவித யூசப், ஏ. எல். எம்.காசிம் ஜனாதிபதி சட்டத்தரணி பயஸ்முஸ்தவா, தென்கிழக்குப் பல்கலைக்கழக உபவேந்தர் எம். எல். ஏ. காதர் ஆகிய ஐவரையும் சிபார்சு செய்து இவர்களில் ஒருவரை நியமிக்குமாறு கோரியுள்ளது. (வ)

---

## மின்சாரம்

யில் வசிக்கும் நமசிவாயம் வசந்தன் (வயது-22) கப்புதூவைச் சேர்ந்த செல்லத்துரை கிருபாகரன் (வயது19) ஆகிய இருவருமே பலியானவர்களாவர்.

நேற்றுக் காலை 7.30 மணிக்கு நடைபெற்ற இச்சம்பவம் பற்றி மேலும் தெரியவருவதாவது, நேற்றுக் காலை வர்த்தக நிலைய களஞ்சிய அறைக்குள் சென்ற வசந்தன் அறைக்குள் வீழ்ந்து கிடந்த கிருபாகரனைக் கண்டு அவரை எடுத்து வைத்தியசாலைக்கு அனுப்பிவிட்டு மீண்டும் கடைக்கு வந்துபார்த்தபோது வசந்தனும் மின்சாரத்திற்குப் பலியானதாக தெரிவிக்கப்படுகிறது.

இம்மரணங்கள் தொடர்பான விசாரணைகள் பருத்தித்துறை மாவட்ட நீதி மன்றில் பதில் நீதிவான் மு. திருநாவுக்கரசு முன்னிலையில் நடைபெற்றது சடலங்கள் உறவினரிடம் ஒப்படைக்கப்பட்டன. (வ-2)

---

# கட்டைவேலி - நெல்லியடி ப.நோ.கூ. சங்கத்தில் இன்று முதியோர் - சிறுவர் நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

கட்டைவேலி - நெல்லியடி பலநோக்கு கூட்டுறவு சங்கத்தின் 'முதியோர் சிறியோர் வார' நிகழ்வுகள் இன்று பிற்பகல் 3 மணிக்கு கட்டைவேலி நெல்லியடி ப. நோ. கூ. சங்க மண்டபத்தில் சங்கத் தலைவர் த. சிதம்பரப்பிள்ளை தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக முன்னாள் கூ. அ. உ. ஆணையாளர் த. கந்தசாமி கலந்து கொள்வார். அறிமுகவுரையை சங்கத்தின் முன்னாள் உப தலைவர் செ சதானந்தனும் வாழ்த்துரைகளை சங்கத்தின் மகளிர் குழுத்தலைவி திருமதி வ. பத்தினிப்பிள்ளையும் சங்கத்தின் கலாசார கூட்டுறவுப் பெருமன்றத்தலைவர் மு. கந்தப்பு சங்க உத்தியோகத்தர் வ. காந்திமதிநாதனும் வழங்குவர். 'முதுமை நூலின்' அறிமுகவுரையை உடுப்பிட்டி அ. மி. கல்லூரி அதிபர் க. நடராஜாவும் ஆசிரியர் ஐ. சண்முகமும் நிகழ்த்துவர். [ந-5]

# பரீட்சைக்கு விண்ணப்பித்தவர்கள் தொடர்பு கொள்ளவும்

(யாழ்ப்பாணம்)

மக்கள் வங்கியில் முகாமைத்துவப் பயிலுநர் வங்கி உதவியாளர் பதவிகளுக்கு ஆட்சேர்ப்பதற்கான எழுத்துப் பரீட்சை எதிர்வரும் 6 ஆம் திகதி சனிக்கிழமை யாழ்.நகரில் நடத்துவதற்கு ஒழுங்குகள் செய்யப்பட்டிருப்பதாகவும்,

இப்பரீட்சைகளுக்குத் தோற்ற விண்ணப்பித்த பின் வருவோரை பிரதேச முகாமையாளருடன் தொடர்பு கொண்டு மேலதிக விபரங்களைப் பெற்றுக் கொள்ளுமாறும் அறிவிக்கப்பட்டுள்ளது;

ரி. பவான் நல்லூர், ஜெ. டி ஜெயராஜா நல்லூர், எஸ். கந்தையா திருநெல்வேலி கிழக்கு, ரி. கிருபாகரன் மானிப்பாய், என். கிருஷ்ணகுமார் நல்லூர், எஸ். குமாரமனோகரி கரவெட்டி, பி. குணராசா நீராவியடி, ஜி. நாமகன் சுண்டுக்குளி, ரி. நவநீதகிருஷ்ணன் கந்தர்மடம், பி. நவரட்ணம் நல்லூர், எஸ். பிரேமகுமார் கந்தர்மடம், எஸ். பிரேம்குமார் மானிப்பாய், எஸ். இராஜேந்திரம் யாழ்ப்பாணம், ஆர். றமணன் யாழ்ப்பாணம் ரி. சிவலிங்கசோதி மல்லாகம் எஸ். சிவஞ்சன் சங்கானை, எஸ். சிவசுப்பிரமணியம் யாழ்ப்பாணம், எஸ். சிவதரன் யாழ்ப்பாணம், எம். சுந்தரலிங்கம் கைதடி, எ. சுபேசன் வட்டுக்கோட்டை, கே. சுதாகரன் யாழ்ப்பாணம், என். சுதேஸ்குமார் அரியாலை, எஸ். தர்மலிங்கம் சாவகச்சேரி, என். சி. உமாகாந்த் நல்லூர், ஜி. விஜயரட்ணம் கொக்குவில், ஈ. குமரன் மானிப்பாய்.

ஜே. எஸ். பெனடிகற் யாழ்ப்பாணம், எஸ். புவனேஸ்வரன் அச்சுவேலி, ஆர். ரதினசிங்கம் கந்தர்மடம், ஜே. செல்வரட்ணம் கோப்பாய், கே. சஜாந்தி இணுவில், கே. சின்னத்தம்பி கரவெட்டி எஸ். சிவசர்மா கோண்டாவில் ஜி. சுந்தரலிங்கம் யாழ்ப்பாணம்கே. தர்மசோதிஇணுவில்கே. தில்லையம்பலம்சண்டிலிப்பாய், டி. குணரட்ணம் கொக்குவில், எஸ். செந்தூரன் சாவகச்சேரி. (உ-3)

---

## 54பயணிகளுடன். . . -

இந்தியாவின் சர்ச்சைக்குரிய மாநிலமான காஷ்மீர் சட்டசபைக் கட்டடத்தின்மீது கஷ்மீர்தீவிரவாதிகள் 1ம் திகதி நடத்திய குண்டுத்தாக்குதலில் 30க்கு மேற்பட்டோர் பலியான சம்பவத்தை அடுத்து இந்த விமானக் கடத்தல் இடம் பெற்றுள்ளது. (வ)

# நூல்கள் வெளியீடு

(உடுவில்)

யாழ்ப்பாணம் சர்வானந்தமயபீடத்தின் ஆண்டு நிறைவை ஒட்டி இன்று பி. ப.2.00 மணிக்கு நல்லூர் கந்தசுவாமி கோவில் மேற்கு வீதியிலுள்ள ஸ்ரீமுத்து விநாயகர் ஆலயத்தில் கோப்பாய் ப. சிவானந்தசர்மா எழுதிய கும்பாபிஷேக விக்கினேஸ்வர புண்யாகவசனத் தொகுப்புக்கள் அடங்கிய நூல்கள் வெளியீடு செய்யப்படவுள்ளன.

சிவஸ்ரீ சு. வ. சுந்தரமூர்த்திக்குருக்கள் தலைமையில் இந்நிகழ்வு இடம் பெறவுள்ளது. (உ-129)

# கிருமி நாசினி தெளித்தவர் மரணம்

(யாழ்ப்பாணம்)

தோட்டத்தில்கிருமிநாசினி விசிறிக் கொண்டிருந்த விவசாயி ஒருவர் ஒவ்வாமை காரணமாக மயக்கமடைந்துயாழ் வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்ட பொழுதுஅங்கு உயிரிழந்துள்ளார்.

உடுவில் கற்பக்குளையைச் சேர்ந்த இராமநாதன் குகநாதன் (வயது31) என்பவரே நேற்று இவ்வாறு உயிரிழந்தவராவார்.

இவரது சடலம் மரணவிசாரணையின் பின் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது.

(ந-9-10-4)

---

இப் பத்திரிகை "வலம்புரி" அன் கோ ஸ்தாபனத்தாரால் இல. 15, வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் எனும் விலாசத்தில் அமைந்துள்ள அவர்களது அச்சகத்தில் 2001-ம் ஆண்டு அக்டோபர் மாதம் 04-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.